171

நந்தன கார்த்திகை 1—12—52 அணா நான்கு

விதழில்
ஒரு முழு நவீனம்
தைரிய லக்ஷ்மி
வழக்கம்போல் இதர
அம்சங்களும்

ஜகன்மோகினி

171
1.13



3L
m211,N22s9
N52,29.12

"குலதனம்"

வை.மு.கோ. 105வது நாவல்

ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்மாள்

அரிய தமிழ் விருந்து

உதயசூரியன்

வை.மு.ஸ்ரீநிவாஸன், M.A.B.L
முதல் நவீனம் - ரூ. 1-4-0

1. மங்களபுரியில் மகிழ்ச்சி உதயம் 2. நாமகரணமும் நாற்பது திங்களும் 3. மங்களபுரியின் மூன்று திலகங்கள் 4. ஜீவியச்சுழலில் சோதனையின் கொடுமை 5. புயலும் அமைதியும் 6. குருகுல வாசமும் குமரனின் உள்ளமும் 7. ராஜ்யாபிஷேகமும் ராஜ்யபாரமும் 8. காதல் போதனை —கம்பன் வர்ணனை 9. எதிர்பாராத சம்பவம் 10. அதிர்ச்சியும் வைராக்யமும் 11. இதய ஒலி 12. போர்க்களத்தில் மனப்போர் 13. உணர்ச்சி வெள்ளம் 14. இருண்டவானம் 15. உதய சூரியன். [ஸ்ரீசுத்தானந்தரின் முகவுரையுடன்.]

மதமா, மனமா?

வை.மு.ஸ்ரீநிவாஸன், M.A.B.L
இரண்டாவது நவீனம் - ரூ. 1-4-0

1. சேற்றில் முளைத்த செந்தாமரை 2. அகமலர்ச்சியும் ஆபத்தும் 3. பரபரப்பும் பரிதவிப்பும் 4. வாழ்வும் தாழ்வும் 5. சோகமும் வேகமும் 6. இடியும் மின்னலும் 7. பிரசாரமும் விசாரமும் 8. அன்றும் இன்றும் 9. அலறலும் ஆறுதலும் 10. கண்கொள்ளாக் காட்சி 11. விளம்பரமும் விபரீதமும் 12. மனக்கண்ணாடியே உலகம் 13. இன்னலைப் புன்னகைப்போம் 14. உயிர் நிலை — உயர் நிலை 15. பொருள்—அருள்—அமைதி 16. மனதின் சூக்ஷ்மாணுக்கள் 17. அருள் நிலத்தில் அமரானந்தப் பயிர் 18. அவனியில் யாவும் அவனாலே 19. காதல் விளக்கம்—அன்பின் தாயகம் 20. மதமா, மனமா?—மனத்திருவிளையாடல்.

அவஸரமூர்த்தியின் அபூர்வ டயரி

வை.மு.ஸ்ரீநிவாஸன், M.A.B.L
மூன்றாவது சித்திரம் - ரூ. 1-8-0

1. நவீன ப்ரஹ்மதேவன் 2. நவீனங்களின் முன்னோர் 3. கடவுள் இருக்கிறார்! 4. பிரமித்துவிட்டோம்! 5. கீர்த்தனாமணி! 6. ஒரு வாரம் 7. ஸர்வம் ஸங்கீதமயம் 8. இந்திரனின் புதல்வன் 9. ஸ்ரீ க்ருஷ்ணாம்ருதம் 10. கண்கொள்ளாக் காட்சி 11. அன்பின் ஆற்றல் 12. வாழ்வின் மேடுபள்ளங்கள் 13. எதிர்பாராத அநுபவம் 14. பொன் விழா 15. ஆறுதலும் கிளர்ச்சியும் 16. திருப்பதி யாத்திரை.



ஸ்ரீகீதாசாரியனின்கருணைகடாக்ஷத்தினாலும் மோகினிச்செல்வியின் வாசக அன்பர்களின் அரும்பெரும் ஆதரவினாலும் நமது ஜகன்மோகினிச் செல்விக்கு இந்த மாதத்துடன் 29 ஆண்டுகள் பூர்த்தியாகி 30-வதாண்டு நாளது 1953-ம் வருஷம் ஜனவரிமாதத்தில் மங்களகரமாய்ப் பிறக்கப்போகிறது என்கிற சந்தோஷச்செய்தியைக் கூறி உங்களுடன் நாமும் அந்தப் பேரானந்தத்தைப் பகிர்ந்து கொண்டு மகிழ்கிறோம். இப்போதுதான் 1923வது வருஷம் விளையாட்டாக ஆரம்பித்த மோகினிக்கு அங்கிங்கெனாதபடி எங்கும் ப்ரகாசமாய் ஆனந்தத்துடன் அகில ஜகத்தையும் ரக்ஷிக்கும் ஸ்ரீஎம்பெருமானின் திருவருள் கடாக்ஷத்தினால் முப்பதாமாண்டை அடையும்பேறுவாய்த்துள்ளது.

முப்பதாமாண்டில் புதுமணங்கமழும் மலர்வெளிவரவில்லையா என்று பல அன்பர்கள் எழுதியிருக்கிறார்கள். முக்யமாக வெளிநாட்டு அன்பர்கள் பலர் கடிதமெழுதியிருக்கிறார்கள். சிலகாரணங்களால் இரண்டு வருஷகாலமாக பொங்கல் மலர் வராவிடினும் ஆசிரியையின் தனிப்புத்தகத்தை வெளியிட்டுவருகிறோம். ஆனால், தவணைக்கு மேல்பட்ட காலதாமதமாகி வெளியிடப்பட்டது. இந்த முப்பதாவது வருஷத்தில் ஒரு புதுமையான, புதுமுறையில் புதுவெளியீட்டை வாசக அன்பர்களுக்குச்சமர்ப்பிக்கமோகினி சந்தோஷத்துடன் தயாராக இருக்கிறாள்: அந்த ஆனந்தச் செய்தியை அன்பர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

5 JAN 1953
MADRAS

30—ஆம் ஆண்டு மலர்

அதாவது 30-வது ஆண்டில் நமது ஆசிரியை அவர்களாலேயே புத்தப்புதிதாய், இதுவரையில் எழுதி வெளியிடப்படாத 30 விஷய மலர்களை ஒரே புத்தகத்தில் வெளியிட்டு வாசகமகனீயர்களை மகிழ்விக்கத் திட்டம் போட்டிருக்கிறது. அதாவது, வழக்கப்படி ஒரு முழு நாவல்; அதைத் தவிர 29-அம்சங்கள்.

1—வை. மு. கோ. 108-வது நவீனம் “நிர்மல நீரோடை” [காயத்ரி]
5—உண்மைச்சித்திரங்கள்.
5—கட்டுரைகள்.
5—நாடகங்கள்.
5—கடிதங்கள்.
4—சிறுகதைகள்.
5—பலசரக்கு.

ஆக 30—அருமையான விஷயக்கோர்வைகளை இனியதமிழ் அணியாகத் தாங்கி நந்தன பொங்கல் மலர் வெளிவரும்.

இப்போதே அச்சுவேலை நடந்துவருகிறது. சென்ற ஆண்டுகளைப்போல் காலதாமதமாகாது என்பதைத்தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேம்.

20-வது ஆண்டுமலர் முதல் 27-வது ஆண்டுமலர் வரையில், ஒவ்வொரு மலரிலும் ஒரு முழு நாவலும், இதர பலவேறு அம்சங்கள் அனேக அறிஞர்களைக்கொண்டும் எழுதிவெளியிட்டோம். 28-ஆம் ஆண்டில் பாதாஞ்சலியும் 29-ஆம் ஆண்டில் சாந்தியின் சிகரமும் வெளியிட்டோம். 30-ஆம் ஆண்டுப் பொங்கல் புதுமலரின் விவித விருந்து முழுதுமே —முப்பதும்— ஆசிரியையின் பேனாவிலிருந்தே வெளியாகி, முப்பதாம் ஆண்டுவிழா கொண்டாடப்படவேண்டுமென்பது கிதாசாரியனின் ஸங்கல்பம். தவிர, டி மலரில் வெளிவரப்போகும் முழு நவீனம் நிர்மல நீரோடை நமது ஆசிரியையின் 108-வது வெளியீடாகையால் "காயத்ரி" என்ற சிறப்புப் பெயருடன் வெளியாகும்.

இத்தகைய சிறந்த பொருக்குமணிகளை ஏந்திவரும் புதுமலரின் விலை மூன்றே ருபாய்தான். மோகினிச் சந்தாவுடன் சேர்த்து அனுப்புகிறவர்களுக்கு ரிஜிஸ்தர் தபால் செலவு இனும். மோகினியின் அன்பர்கள் தயவுசெய்து இந்த அரிய சந்தர்ப்பத்தில் உதவி செய்துத் தாங்களும் மகிழும்படிக் கோருகிறேம்.

குலதனம் அல்லது பஜனும்ருதம்

நிற்க, எந்த ஒருகாரியமும் தயாபரனின் திருவருள் கடாக்ஷம் பரிபூர்ணமாயிருந்துவிட்டால் நாம் எதிர்பாராமலேயே அதிசீக்கிரத்தில் முடித்துவிடுகிருன். இது ப்ரத்யக்ஷ உண்மை. "ஸௌபாக்யவதி' என்கிற புத்தகம் வந்தபிறகு, "இதுபோன்ற ஆத்மரக்ஷணமான விஷயங்களைக் கதையில் அமைத்துக் கொடுப்பதை நாங்கள் விரும்பி வரவேற்கிருேம்" என்று காரியாலயத்திற்குப் பல கடிதங்கள் வந்தன. ஆசிரியையிடமும் பலர் பாராட்டிக் கேட்டனர். தவிர ஆசிரியை அவர்களை காரியதரிசியாகக்கொண்டு நடைபெறும் மகாத்மாஜி ஸேவாசங்கத்தில் நடக்கும்பஜனை பத்ததி நாமாவளிகளையும் சங்கத்து அங்கத்தினர்களும் இதரர்களும் அச்சிடும்படிக் கேட்டார்கள். வாழ்க்கைக்கு அதிமுக்யமானதும் மிகவும் ருசிகரமானதுமான விஷயங்களைக் கொண்டே சிறந்த கற்பனைக் கதையுடன் பல பல பாடல்கள் நிறைந்த புத்தகமாக

மோகினி
அன்பர்களுக்கு
ஓர்
அரிய விருந்து

குலதனம் அல்லது
பஜனும்ருதம்
என்கிற
வை. மு. கோ.
105-வது புத்தகம்

எதிர்பாராத முறையில் அதிவிரைவில் தயாராகிவிட்டது. விலை 12 அணுதான், தேவையானவர்கள் சந்தாவுடன் சேர்த்தனுப்பவும்.

ப்ரபந்தப் பண்ணிசை

திவ்ய ப்ரபந்தபாசுரங்களை வர்ணங்கள் ஸ்வரஜதிகள் ராகமாலிகைகள் கீர்த்தனங்கள் முதலிய ரூபத்தில் இசைப்பகுதியில்

183172

ஸ்ரீமதி. A. ராஜம்மாள் எழுதி வெளியிடுவதைப் பல அன்பர்கள் பாராட்டி ரஸித்துப் போற்றுவதை நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். அப்பகுதி மோகினியில் துடர்ச்சியாய்வெளியாகும்.

தைரியலக்ஷ்மியைத் தாங்கி இம்மாதம் உங்களை மகிழ்விக்க வந்துள்ள மோகினி 30வதாண்டில் வழக்கப்படி "சுதந்திரப்பறவை" என்கிற தொடர்கதையுடன் சில புதிய அம்சங்களைத்தாங்கிவந்து உங்கள் அன்பையும் ஆதரவையும் பெற்று இன்புறுவாள்-உங்கள் பேராதரவை அளித்து என்றும்போல் மோகினியை உத்ஸாகப் படுத்தும்படிக்கோருகிறோம்.

புதுவருடத்தில்!

1. சுதந்திரப் பறவை—வை. மு. கோ. 107-வது தொடர் நாவல்.
2. சுயசரிதை—சகோதரி சுபலக்ஷ்மி
3. வனிதாமண்டலம்—வசுமதி ராமஸ்வாமி
4. இசைப்பகுதி—ஏ. ராஜம்மாள்
5. சிறுகதைகள்—?
6. பகவத் விஷயம்—ஸ்ரீ ப்ர. அண்ணங்கராசார்ய ஸ்வாமி
7. இலக்கியம்—பி. ஸ்ரீ.
8. தத்துவம்—ரா. ஸ்ரீ. தேசிகன்
9. முப்பது வருட அனுபவம்—ப்ரஸித்தி பெற்ற அறிஞர்.
10. சிற்பச் செல்வம்—வை. மு. நரஸிம்மன்
11. சரித்திர ஜோதி—வை. மு. ஸ்ரீ.
12. மற்றும் பலவகை விருந்து—?

ரஸமான கட்டுரைகள் ஜீவன் ததும்பும் விஷயக்கோர்வைகள் முதலியன வெளியாகும். உங்கள் அன்புமாரிக்கே எதிர்நோக்கிநிற்கும் பயிர்போன்றமோகினியை வழக்கப்படிஆதரிக்கக்கோருகிறோம்

ஒரு விசேஷச் சலுகை.

புதுவருடச்சந்தா ரூ. 3, பொங்கல் மலர் ரூ. 3, சாந்தியின் சிகரம் ரூ. 4, குலதனம் அல்லது பஜனம்ருதம் அணா 12, ஆக 10—12—0, டிக்கு ரிஜிஸ்தர் தபாற்சிலவு சுமார் 12 அணா—ஆக ரூ. 11—8—0க்கு நேயர்கள் ரூ. 10—அனுப்பினால் போதுமானது: அதாவது, 105-வது நவீனமும், தபாற்சிலவும் இனாமாகக் கிடைக்கும். இந்தச் சலுகை 30-ஆம் ஆண்டு விழாவின் ஓர் அம்சம்; ஜனவரி முடிவு வரையில்தான்.

தவிர, டிஸம்பர்—ஜனவரி மாதங்களில் சந்தா நேயர்கள் வாங்கும் நாவல்களுக்கு ரூபாய்க்கு இரண்டணா வீதம் குறைத்துக் கொடுத்துப் புதுவருட விழாக் கொண்டாடப்படும். உடனே முந்துங்கள்.



வெளிநாட்டு அன்பர்களுக்கு முக்கிய அறிவிப்பு.

எக்ஸ்சேஞ்ஜ் கண்ட்ரோல் நிபந்தனைகளின்படி சந்தாப்பணமும், இதர புத்தக விலையும் பாங்குமூலம்தான் வரவேண்டுமென்பதைக் கவனிக்கக் கோருகிறோம். ரிஜிஸ்தர் கவரில் ரூபாய்நோட்டை வைத்து அனுப்பக்கூடாது. மணியார்டரும் அனுப்பக்கூடாது. பாங்க்ட்ராப்ட் வாங்கியனுப்பவும். (பாங்க் இல்லாத ஊர்களில் ப்ரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் வாங்கி க்ராஸ் செய்து அனுப்பவும்: அப்போது அது பாங்க்மூலம் வசூலிக்கப்படும்.) ஷை விதிகளின்படி பணம் வந்தால்தான் பத்திரிகையனுப்ப உத்திரவு கொடுக்கிறார்கள் என்பதை ஞாபகப்படுத்துகிறோம்.

ஏஜண்டுகள் தேவை

ஏஜண்டுகளில்லாத ஊர்களில் ஏஜண்டுகள் தேவை. நிபந்தனைக்கும் மாதிரிப் பிரதிக்கும் உடனே எழுதுங்கள்.

உங்கள் பிரதியை உடனே ரிஸர்வ் செய்யுங்கள்

நினைவிருக்கட்டும்



சுடர்க்கொடியில்
ஓர் இசைப்பூங்கொத்து

தமிழிலக்கியப் பூஞ்சோலையில் கோதை தமிழைச் சுடர்க் கொடியில் பூத்த ஜோதி மலர்கள் என்று சொல்லலாம். கோதை தமிழிலும் 'கோதை தமிழ் முப்பது' என்று சொல்லப்பெறும் திருப்பாவைக்கு ஒரு விசேஷ ஸ்தானம் உண்டு.

ஸ்ரீராமானுஜரே இந்தப் பிரபந்தத்தில் விசேஷமாக ஈடுபட்டுத் 'திருப்பாவைச் சீயர்' என்று கொண்டாடப்பெறுகின்றார்.

சூடிக் கொடுத்த சுடர்க் கொடியே! தொல்பாவை
பாடி அருளவல்ல பல்வளையாய்!

என்று உய்யக்காண்டார் அருளிச் செய்ததாகக் கருதப்பெறும் 'தனியன்' ஒன்று ஆண்டாளை விளித்து அதே பகவத்பிரேமத்தை நமக்கும் உபகரிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறது.

ஆண்டாள் ஆண்டவனுக்குச் சூடிக்கொடுத்த பூமாலைகளைக் குறித்துக் கதைகளில் கேள்விப்படுகிறோம். என்றும் வாடாத இரண்டு பாமாலைகளையும் ஆண்டாள் இறைவனுக்குச் சூட்டினாள்: இவற்றில் முதலாவது சூட்டிய பாமாலை 'திருப்பாவை' தான்.

திருவாடிப் பூரத்துச் செகத்துதித்தாள் வாழியே!
திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே!

என்று ஸ்ரீவைஷ்ணவ உலகம் ஆண்டாளை வாழ்த்துகிறதல்லவா?

ஆண்டாளைக் 'கோதை' என்றும் 'கோதை நாச்சியார்' என்றும் போற்றுவது பிரசித்தம். 'கோதை' என்னும் பெயருக்கே 'மாலை' என்றும் 'மாலைபோல் இனியள்' என்றும் பொருள் கூறலாம். திருப்பாவை என்னும் பாமாலையின் அருமை பெருமைகளில் பெரிதும் ஈடுபட்ட ஓர் அறிஞர்,

பாதகங்கள் தீர்க்கும் பரமன் அடிகாட்டும்
வேதம் அனைத்துக்கும் வித்தாகும்—கோதைதமிழ்
ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதும் வம்பு

என்று பாடியிருப்பதைத் தமிழர் நன்கறிவர்.

'கோதை பிறந்த ஊர்' ஸ்ரீவில்லிபுத்தூர். இவ்வூரை 'நான் மறைகள் ஓதும் ஊர்' என்றும், 'வேதக்கோன் ஊர்' என்றும் போற்றுகிறார்கள். இவ்வூரில் 'வேதம் அனைத்துக்கும் வித்தாகும்' திருப்பாவை தோன்றியது பொருத்தமானதே.

'பாவை' என்பது நோன்பு; மார்கழி நோன்பு. இந்த நோன்பைக் கோகுலப்பெண்கள் நோற்றுக் கண்ணனை அடைந்ததாக ஸ்ரீ பாகவதபுராணம் தெரிவிக்கிறது. நாடு செழிக்க மழை பெய்யவும், நல்ல கணவரை அடையவும் கன்னியர் மார்கழி நோன்பு நோற்கும் ஒரு பழைய வழக்கத்தைத்தான் புராணம் கூறுகின்றது. கண்ணனைநோக்கி அந்த நோன்புநோற்ற கோபியரின் தன்மையை ஆண்டாளும் அடைந்து திருப்பாவை பாடியிருக்கிறாள்.

'இவளும், ஸ்ரீ வில்லிபுத்தூரே திருவாய்ப்பாடியாகவும், அங்குள்ள பெண்கள் இடைப்பெண்களாகவும், தானும் அவர்களிலே ஒருத்தியாகவும், வடபெருங்கோயிலே ஸ்ரீநந்தகோபர் திருமாளிகையாகவும், உள்ளே நிற்கிறவன் கிருஷ்ணனாகவும் அநுஸந்

தித்து, தன்னுடைய திருவுள்ளம் திருவாய்ப்பாடியிலே குடிபோய், பாவநாப்ரகர்ஷத்தாலே (பாவனையின் முதிர்ச்சியினாலே) அநுகாரம் (ஒருவரைப்போலச் செய்தல்) முற்றி, அவை தானேயாய் இடைநடையும் இடைமுடியும் இடைப்பேச்சும் முடைநாற்றமும் ஆய்விட்டது' என்பது வியாக்யான சக்ரவர்த்தியான ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையின் உரை அவதாரிகை—அதாவது வியாக்யான முகவுரை.

இத்தகைய திருப்பாவை என்னும் இசைப்பூங்கொத்தில் முப்பது கவிதைமலர்கள் பரிமளிக்கின்றன. முதலாவது பாட்டு,

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்!

என்று தொடங்குகிறது. மார்கழி நோன்பிலும் நீராட்டத்திலும் விருப்பமுடைய பெண்களை 'எல்லாரும் வாருங்கள்' என்று ஆய்ப்பாடிக் கன்னிகைகளில் சிலர் அழைக்கிறார்கள். ஸ்ரீமந்நாராயணனாகிய கண்ணனே நமது விருப்பத்தை நிறைவேற்றச் சித்தமாயிருக்கிறான் என்று சொல்லி அழைக்கிறார்கள்.

அடுத்த பாட்டிலே, நோன்பு நோற்கின்ற தாங்கள் மேற்கொண்டுள்ள நியமங்களைக் குறிப்பிடுகிறார்கள்.

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி

என்று தொடங்கும் மூன்றாவது பாட்டு, நோன்பை வியாஜமாகக் கொண்டு புருஷோத்தமன் பெயரைச்சொல்லி நீராடினால், மழை பெய்து நோயும் பஞ்சமும் நீங்கி நாடுசெழிக்கும் என்பதை விசேஷமான கவிச்சுவையுடன் தெரிவிக்கிறது.

தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரி பெய்து
ஓங்கு பெருஞ் செந்நெலூடு கயலுகள,
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப,
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்

என்பது நாட்டின் செல்வச்சிறப்பை வசிகரமாய்ப் பிரதிபலிக்கும் அழகிய கவிதையல்லவா?

நான்காம் பாட்டு மழைப்பாட்டு.மழை கண்ணன் அருள்போல் இறங்கிவர வேண்டும் என்பதும், மழைபோல் கண்ணன் அருளும் வரவேண்டும் என்பதும் இப்பாட்டின் பொருள்.

ஐந்தாம் பாட்டிலே நோன்பை அனுஷ்டித்து இறைவனை மன மெய் மொழிகளில் கொண்டாடினால் பாவங்களெல்லாம் தீயினில் தூசாகும் என்னும் கொள்கை வற்புறுத்தப்படுகின்றது.

ஆறும்பாட்டு முதல்பத்துப் பாசுரங்களில் எழுந்திராதவர்களை எழுந்தவர்கள் எழுப்புகிறார்கள். நோன்பு என்ற வியாஜத்தால் ஸ்ரீகிருஷ்ணாநுபவத்திற்குத்தான் எழுப்புகிறார்கள்.

பதினாறுவதுபாட்டு முதல் ஏழுபாசுரங்களில் கன்னியர் எல்லோரும் கூடியபின்பு கண்ணனை எழுப்ப விரும்பி நந்தகோபர் மாளிகைக்குச் சென்று அங்குள்ளவர்களையும் கண்ணனையும் துயிலெழுப்புகிறார்கள்.

இருபத்துமூன்றாவது பாட்டிலே, கண்ணன் கம்பீரமாகச் சிங்காசனத்தில் வீற்றிருந்து தாங்கள் வந்த காரியத்தை விசாரித்தருளவேண்டும் என்கிறார்கள். இவர்களுடைய வேண்டுகோளுக்கு

இணங்கிக் கண்ணன் படுத்திருந்த இடத்தைவிட்டு வெளியே வந்ததும், அந்த வடிவழகு கண்டு இவர்கள் தங்கள் காரியத்தை மறந்து அவனிடம் பரிவுகொண்டு போற்றுகிறார்கள்; பிறகு தங்கள் வேண்டுகோளைத் தெரிவிக்கிறார்கள். இது இருபத்து நான்காவது பாட்டின் பொருள்.

அடுத்த பாட்டிலே, எங்களுடைய துயரமெல்லாம் நீங்கி நாங்கள் மகிழுமாறு அங்கீகரித்தருள வேண்டும் என்கிறார்கள். நீங்கள் சொல்வது என்ன? அதற்கு மூலம் என்ன? அதை அனுஷ்டிப்பதற்கு வேண்டுவன எவை?' என்று கண்ணன் கேட்க, அவற்றை விவரித்துச் சொல்லுகிறார்கள் இருபத்தாரு வது பாட்டிலே.

இதற்கு அடுத்த பாட்டிலே, 'நோன்பு நோற்ற பின்பு பெறும் பேறுயாது?' என்னும் வினவுக்கு விடைகிடைக்கிறது. நெய் பால் உண்ணாமலும், அலங்காரங்கள் செய்துகொள்ளாமலும் வருந்தி நோற்ற வருத்தமெல்லாம் தீர, நீயும் நப்பின்னைப்பிராட்டியும் எங்களை உண்பித்து அலங்கரிக்க வேண்டும் என்கிறார்கள்.

இருபத்தெட்டாவது பாட்டிலே, 'நீங்கள் விரும்பியவாறு சம் மானம் பெறுவதற்கு என்ன உபாயம் செய்தீர்கள்?' என்ற கண் ணன் கேள்விக்கு விடை கூறுகிறார்கள்.

'யாதோர் உபாயமும் தங்களிடம் இல்லை' என்று தான் சொல்லு கிறார்கள். 'நீ ஆய்க்குலத்தில் பிறந்ததே எங்களை ஈடேறச் செய் வதற்குத் தானே; எங்களால் ஏதேனும் பெறுதற்கு அல் லவே!' என்கிறார்கள்.

இருபத்தொன்பதாவது பாட்டிலே—அதாவது இறுதிப்பாட் டுக்கு முந்தியபாட்டிலே—திருப்பாவையின்பரமதாத்பரியம்வெளிப் படுகிறது. நோன்பு நோற்பதும் வியாஜம் தான்; அதற்குவேண்டிய வைகளைக் கண்ணன் தருவான் என்பதும் ஒருவியாஜம் தான்.

உற்றோமே ஆவோம்;
உனக்கே நாம் ஆட்செய்வோம்

என்பதாக ஸ்ரீகிருஷ்ண கைங்கரியப் பிரார்த்தனை தான்.

நோன்பு நோற்றுப் பயன்பெற்ற கோபிகைகளைப் போலவும், பாவனையின் முதிர்ச்சியால் தானும் 'இடைநடையும் இடைமுடியும் இடைப்பேச்சும்' ஆகிப் பேறுபெற்ற ஆண்டாளைப் போலவும் திருப்பாவை கற்பவரும் பேறு பெறுவார்கள் என்று இறுதிப் பாசுரம் உறுதி கூறுகிறது.

'செல்வத்திருமாலால் எங்கும் திருவருள்பெற்று இன்புறுவர்' என்கிறது இறுதிப்பாசுரம். அதாவது இந்தக் கோதை தமிழை ஈடுபட்டு ஓதுவோர் 'திரு'வாகிய பிராட்டியாலும் 'மால்' ஆகிய எம்பெருமானாலும் என்றும் எங்கும் திருவருள் செய்யப் பெற்று இன்புற்று வாழ்வர் என்பது பொருள்.

திருப்பாவை முப்பது பாடல்களுக்கும் 'ஸ்வாபதேசம்' என்ற உள்ளுறை பொருளும் உண்டு. இந்தப் பிரபந்தத்திலும், இதன் புதைபொருளை விளக்கும் வ்யாக்யான நயங்களிலும் ஈடுபடுவோர் இக் கோதை தமிழை நம் தமிழிலக்கியப் பூஞ்சோலைக்குத் தெய் விக அழகு தரும் ஓர் இசைப் பூங்கொத்தாகப் போற்றுவர் என் பது திண்ணம்.

என் சுய சரிதை

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்
B. A., L. T., M. L. C.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

ரங்கூன் பட்டணத்தில் பார்க்கவேண்டிய முக்கிய இடம் பட்டணத்தின் நடுவிலுள்ள புத்தர் கோவில். Shwe Dagon Pagoda என்று அதற்குப் பெயர். ஒரு உயர்ந்த விஸ்தாரமான குன்றின் மேல் கட்டப்பட்டிருக்கிறது. அடுக்கடுக்கான அழகிய சிற்பவேலைகளுடன் கூடிய கோபுரங்கள். பர்மியர்களுக்கே சிறந்த கலையுணர்ச்சி அதிகம். அடிவாரத்திலிருந்து படிகளில் ஏறிப்போகும்போது ஆங்காங்கு தோரணவாயில்கள். அந்த வாயிற்படிகளில் புஷ்பங்கள் கொடிகள், தேவதைகள் முதலான உருவங்களை சுவற்றுடன் ஒட்டி தட்டையாகச் செதுக்காமல், எடுப்பாக Embossed செய்திருப்பது இன்னும் கவர்ச்சிகரமாயிருக்கிறது—ஆங்காங்கு சலவைகற்களினால் செய்த பெரிய,சிறிய புத்த பகவானுடைய விக்கிரகங்கள் அபரிமிதமாயிருக்கின்றன. இருந்த திருக்கோல உருவங்கள் தான் அதிகம். அதாவது புத்த பகவான் நிஷ்டையில் இருக்கும் பாவனை. நின்ற திருக்கோலமும் சயன திருக்கோலமும் அபூர்வம். பகவானது புன்சிரிப்புடன்கூடிய அழகிய திருமுகம் பக்தர்களுக்கு பரவசத்தையுண்டாக்கும். பகவானுக்கு நிவேதனம் நிறைய அழகிய புஷ்பங்கள், பழங்கள் நெல் அல்லது அரிசி. பக்குவம் செய்தது எதுவும் கிடையாது. ஆங்காங்கு கடைகள். புத்த பகவானுடைய உருவச்சிலைகள் கருங்கல், சலவைக்கல், பித்தளை இவற்றில் செய்தது; சிறிய அளவிலிருந்து பெரிய பெரிய அளவு வரைக்கும் ½ ரூபாயிலிருந்து 200 ரூபாய் வரைக்கும் கிடைக்கிறது. பர்மாவில் பழுக்காய் சாமான்கள் அபரிமிதம். பலவித அழகிய பெட்டிகள், டிபன் வைக்கும் அடுக்கு பாத்திரங்கள், வெற்றிலை பாக்கு முதலியனவைப்பதற்கு பல அறைகளுடன்கூடிய பழுக்காய் டப்பிகள், இத்தியாதி. பலவித பூவேலைகள் செய்த Embroidery துணிகள். எல்லாம் விசேஷம். வெல்வெட்டில் மணிகள் தைத்து பாதரக்ஷைகள்—இவைகள் நாங்கள் வாங்கப்போனபோது பெரிய அளவே கிடைக்கவில்லை. எல்லாம் (பெண்களுக்கு வேண்டியவை) சிறிய அளவே. பிறகுதான் அவ்விடத்துப்பெண்களின் கால்களை கவனித்தோம்—நமக்குள் எப்படி சிற்றிடை அழகோ அப்படி அவர்களுக்கு சிறிய பாதங்கள். சைனா ஜப்பான் பர்மா இந்த தேசங்களில் பிறந்ததிலிருந்து பெண்குழந்தைகளின் பாதங்களை அதிகம் வளரவிடாமல் கெட்டியாகக் கட்டிவைக்கிறார்கள். ஆகவே அவர்களது பாதங்கள் சிறு அளவாகவேயிருந்துவிடுகிறது. அதற்கேற்ற அளவு பாதரக்ஷைகள்!!

ரங்கூன் தெருக்களெல்லாம் அழகானவை. சில முக்கியமான தெருக்களைத்தவிர மற்ற தெருக்களெல்லாம் முதல்தெரு...40 ஆவது...50 ஆவது தெரு என்று எண்களினாலேயே குறிக்கப்பட்டிருக்கின்றன. இது ஒருவிதத்தில் தெருக்களைக்கண்டுபிடிப்பதற்கு வசதியாயிருக்கிறது. பர்மாதேச முழுவதிலும் ஆங்காங்கு

காடுகள் அதிகம். மரங்கள் நயமாயும் வலுவாயும் கிடைக்கின்றன; ஆகவே அநேகம் வீடுகள் மரங்களினுலேயே கட்டப்பட்டுள்ளன. ஏழைகளின் வீடுகள் நம் தேசத்தில் குடிசைகளாயிருக்கும், அங்கு நல்ல வலுவான மரக்கட்டைகளை நட்டு சுமார் 6 அடி உயரத்துக்கு மேல், மரப்பலகைகளால் ஆன வீடுகள். வீடுகளுக்கு அடி பாகத்தில் சுற்றிலும் மரக்கட்டைகளாலான தூண்களுக்கு உட்பட்ட இடத்தில் வண்டி, மாடு, ஆடு, கோழி இத்தியாதி வைக்குமிடம். வீட்டின் சுவர்கள், ஜன்னல்கள், மேல்கூரை எல்லாம் மரப்பலகைகளால் கட்டப்படுகின்றன.

ரங்கூனிலிருந்து சுமார் 10 மைல்களுக்கப்பால் இன்ஸீன் என்னுமிடத்தில் பெட்ரோல் எண்ணெய் தயாரிக்கின்ருர்கள்.

பர்மாவின் நடுபாகத்தில் பூமியில் சுரக்கும் ஒருவித எண்ணெயை பெரிய குழாய்கள் மூலமாக இங்கு கொண்டுவந்து பலவித இயந்திரங்களின் உதவியால் படிப்படியாக, மட்ட மண் எண்ணெய் உயர்ந்த மண்ணெண்ணெய், மட்டமான பெட்ரோல் உயர்ந்த ரக பெட்ரோல் இப்படியாக தயாரித்து, பர்மா ஷெல் கம்பெனியார், டின்களில் நிரப்பி ஏற்றுமதி செய்கிருர்கள். அங்கேயே ஒரு இடத்தில் டின் ஷீட்டுக்களை இயந்திரங்களைக்கொண்டு வேண்டிய அளவுகளுக்கு வெட்டி, ஒரே அளவான டின் டப்பாக்கள் செய்து அவற்றில் மண்ணெண்ணெய் பெட்ரோல் எண்ணெய் இவற்றை நிரப்பி, மூடி, ஸீல்வைத்து எழுத்துக்களைப் பொரித்து, படகுகளில் ஏற்றி ஸ்டீமர்களுக்குக்கொண்டுபோய் சேர்க்கும் வரைக்கும் படிப்படியாக இயங்கும் வேலைகள் பார்ப்பதற்கு நிரம்ப ஸ்வாரஸ்யமாயிருக்கிறது.

புத்தமதம் பரவியுள்ள பர்மாவில் காஷாய வஸ்திரம் கமண்டலத்துடன் கூடிய புத்தபிக்ஷுக்கள் மிகுதியாக இருக்கின்றனர். நம் ஹிந்துதர்மத்தின் பிரகாரம் ஒருவன் ஸந்நியாச ஆசிரமத்தை மேற்கொண்டு விட்டால் மறுபடி அவன் கிரகஸ்தத்துக்கு வரமுடியாது. புத்தபிக்ஷுக்கள் அப்படி யல்லவாம்! காஷாய வஸ்திரமுடுத்திக்கொண்டு கொஞ்சகாலம் பிக்ஷுவாகயிருக்கலாம். அது அலுத்துப்போனுல் அழகான கைலி உடுத்திக்கொண்டு குடும்பம் நடத்தலாம். இதில் ஏதேனும் கஷ்டம் ஏற்பட்டு வெறுப்புண்டானுல் மறுபடி பிக்ஷுவாகி கவலையற்று இருக்கலாம்!! நிரம்ப பொறுப்பற்ற சுகஜீவனம்!! நாங்கள் பார்த்துக்கேட்டு அறிந்தமட்டில், பர்மியர்களுக்குள் ஆண்களை விட பெண்கள்தான் அதிகம் படித்து பொறுப்புடன் உழைப்பவர். கடைகளில் மார்க்கெட்டுகளில் ஆண்பெண் இருவரும் இருந்து வியாபாரம் செய்கின்றனர். ஆண்மகன் ஒருநீண்ட சுருட்டைபுகைத்துக்கொண்டு நிம்மதியாக சாய்ந்து கொண்டிருக்கிருன். பெண்தான் சாமான்களைக்கொடுத்து பில் (Bill) எழுதிக்கொடுத்து வியாபாரம் செய்பவள். ரிக்ஷாக்கள் அதிகம். அதை இழுத்துச் செல்பவர்கள் நம் இந்தியாவிலிருந்து வயிற்றுப் பிழைப்புக்காக அங்கு ஆயிரக்கணக்கில் இருக்கும் ஏழைகள், முக்கியமாக தெலுங்கர்கள். ரிக்ஷாவில் போகும் பர்மியன் நிற்க வேண்டிய இடம் வந்தவுடன் தன்காலால் ரிக்ஷா இழுப்பவன்

முதுகில் தட்டி நிறுத்தச் சொல்கிறான். அந்த ஏழை, பாவம், வயிற்றுக்கொடுமையால் இந்த அவமானத்தைப் பொறுத்துக் கொண்டிருக்கிறான். கிராமங்களில் வயல்களில் வேலைசெய்பவர்கள் மிகுதியானவர் நம்இந்தியர்களே: பர்மியன் வேலை செய்யும்படி நேர்ந்துவிட்டால் ஒருநீண்ட கம்பின் நுனியில் கட்டியவலையில் உள்ள தானியவிதைகளை நின்றபடியே (குனியாமல்) விசிரியிரைப் பான்.

பர்மியர்களுடைய நடனக்கலை அழகானது. Pwe என்று பெயர் அவர்களது நடனத்துக்கு. புத்தபகவானுடைய பூர்வஜன்ம சரித்திரவரலாறுகளிலிருந்து (புராண வரலாறு) எடுத்த விஷயங் களை நடித்துக்காட்டும் நாடகங்கள். பலநிற காகிதங்களால் பல வடிவங்களில் செய்த சைனுவிளக்குகள் அலங்காரமாக விசேஷ காலங்களில் ஏற்றுவார்கள்.

ஒருவாரம் ரங்கூனிலிருந்து பிறகு, ரயில் மார்க்கமாய் பிரயாணம் செய்து "மேமியோ" என்னும் மலைபிரதேசத்திலுள்ள இடத்துக்குப்போய் ஒரு அழகிய மரவீட்டில் 10 நாள் தங்கினோம். Hill station நீலகிரி கொடைக்கானல் போன்ற இடம். மலைமேலே ரயில்பாதை. சுற்றிலும் அழகிய மலைகாக்ஷிகள். Orchids ஒருதாவர இனம். அவ்விடத்து மூங்கில்கள் வளமையானவை ½அடி முதல் 1 அடி வரைக்கும் குறுக்களவு உள்ளவை. 2கணுக்களுக்குள்பட்ட பாகத்தை வெட்டி அதை 2 பாதியாக்கி அதில் எருப்போட்டு ஆர்சிட் செடிகளை வைத்து வளர்த்து மார்க்கெட்டுகளில் விற்கிறார்கள். பலநிற அழகிய புஷ்பங்கள் Orchids கவர்ச்சிகரமா யிருக்கும் பழங்கள் கறிகாய்கள் யாவும் வளமையாயும் மலிவாயும் கிடைத்தன.

அங்கிருந்து ஒருநாள் ரயில் மார்க்கமாய் Gokteik என்னு மிடத்துக்குப் போய்வந்தோம். வழியெல்லாம் மலைகளும் அடர்ந்த காடுகளும் மகோன்னதமான இயற்கைக் காக்ஷிகள். 'காக்டேக்' என்னுமிடத்தில் இரண்டு பக்கங்களில் அடுக்கடுக்கான உயர்ந்த மலைகளும் நடுவில் ஒருஆழமான பள்ளத்தாக்கும், அதில் தெளிந்த பெரிய ஆறு ஓடுகிறது. இரண்டு மலைகளையும் பிணைத்துக்கட்டப்பட்டிருக்கும் ரயில் இரும்புப்பாலம், இஞ்சினியர் களின் சாமர்த்தியத்துக்குச் சிகரம் போன்றது. மனிதன் நுழைந்து செல்லமுடியாத அந்தக்காட்டுப் பிரதேசத்தில் ஆழ மான ஜலத்திலும் கரடு முரடான பெரும் பாறைகளிலும் வலு வான இரும்புத்தூண்கள் அமைத்து பலகணவாய்களுடன் கூடிய அந்த ரயில் பாதையைக்கட்டி ஜயித்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது இயற்கையைக்கட்டி ஆளும் மனித னுடைய ஆழ்ந்த அறிவும் ஆற்றலும் வியக்கத்தக்கதாயிருக் கிறது. மலையடிவாரத்திலிறங்கி குளிர்ந்த ஜலத்தில் நீராடி, நாங்கள் எடுத்துப்போன ஆகாரத்தை உண்டு இளைப்பாறினோம். உயரமான அந்தப்பாலத்தின்மேல் ஓடிச்சென்ற ரயிலை தலை நிமிர்ந்து பார்த்து அத்தனை உயரமான பாலத்தைக்கட்டிய இஞ்சினியர்களின் சாமர்த்தியத்தை நினைத்து வியந்தோம். பிற் பகலில் அங்கிருந்து ரயிலேறி இரவு மேமியோ வந்து சேர்ந்தோம். குளுர்ச்சியான அழகிய மேமியோவில் 10 நாட்களிருந்துவிட்டுப்

பிறகு அங்கிருந்து புறப்பட்டு ஆங்கில அரசாங்கம் வருவதற்கு முன் பர்மிய அரசர்களின் தலைநகரமாயிருந்த மாண்டலே (Mandalay) (மாந்தலே?) என்னுமிடத்துக்குச் சென்றோம். பர்மாவின் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஐராவதிநதி ஓடுகிறது. கங்கைநதியில்போல ஐராவதிநதியில் படகுகள், சிறுஸ்டீம் போட்டுகள் மூலம் மிருதியான வியாபாரங்கள் நடக்கின்றன. நதியிலிருந்து இருபக்கங்களிலும் வாய்க்கால்கள் வெட்டப்பட்டு பயிர்த் தொழில்கள் நடக்கின்றன. பர்மாவில் மழை அதிகம். ஆகவே, நெல்பயிர் விசேஷம். நம்இந்தியாவிலிருந்து தனவணிகர் அநேகம் பேர் அங்கு சென்று அவ்விடத்து செழிப்பான நிலங்களை வாங்கி நெல் பயிர்செய்கின்றனர். ஒருகாலத்தில் வெள்ளை யானைகள் இருந்தனவாம் (ஐராவதத்தின் ஸந்ததிகளாயிருக்கலாமோ?) ஐராவதிநதி ஐராவதத்தைப்போன்ற வெள்ளை யானைகள் இவைகள் இந்திரனது அமராவதியை ஞாபகப்படுத்துகிறதல்லவா? அஷ்டதிக்குப் பாலகரில் இந்திரன் கிழக்குத் திசைக்கு அதிபதி. ஒருக்கால் பிரயாணவசதிகள் அதிகமில்லாத அந்தக்காலத்தில் பர்மாவைத்தான் இந்திரபுரியாக நம் இந்தியர் நினைத்திருப்பர்களோ? நிற்க, மாந்தலேயில் நடுவில் பழைய அரசர்களது அரண்மனை, அழகான சித்திர, சிற்ப வேலைகள் அமைந்த சிவப்புநிற பழுக்காய்தூண்கள், தரைகள், விட்டங்கள், மேடைகள் இத்தியாதி பார்ப்பதற்கு கவர்ச்சிகரமானது. அரண்மனையைச்சற்றி 4 பக்கங்களிலும் உயர்ந்த மதில்சுவர்களும் அவற்றை யொட்டி அகலமான அகழிகள்: அகழிஜலத்தில் தாமரை, அல்லி, செங்கழுநீர் முதலிய புஷ்பங்கள் கண்களுக்கு விருந்தாயிருந்தன. ஊரிலிருந்து சிறிது தூரத்தில் அழகியமலையும் அதன் மேல் புத்தபகவானுடைய கோவிலும் பழனி மலையைப் போல படிகளும், படிகளின்மேல், மலையடிவாரத்திலிருந்து மேலே ஸந்நிவரைக்கும், மழை, வெயில் தாக்காதபடி ஓட்டுக்கூரையும் நிரம்ப அழகானவை. 2, 3 நாள் நாங்கள் மாண்டலேயில்தங்கி பல இடங்களைப் பார்த்துவிட்டுப்பிறகு திரும்பி இரங்கூனுக்கு வந்து நாலைந்து நாள் தங்கினோம். அங்கு எங்களுக்குத் தெரிந்த சிநேகிதர்கள் சிலர், அந்தஊர் மாதர் சங்கம் இவற்றில் வரவேற்பு விருந்து இத்தியாதி. ஸ்ரீமான்கள் S. P. S. அய்யர். C. S. மணி அய்யர், ரத்தினசாமி அய்யர், R. G. அய்யங்கார், சர்மா இவர்கள் சில முக்கியமானவர்கள்.

மே மாதம் 22-ஆந்தேதி "எரின்புரா" என்னும் ஸ்டீமரில் புறப்பட்டு கடல் யாத்திரையை நிரம்ப நன்ருக அனுபவித்து 25-ஆந்தேதி சென்னைவந்து சேர்ந்தோம். அந்தவருஷம் கோடை வெயில் மிகுதி. ஆகவே மறுபடி புறப்பட்டு, கொள்ளிடக்கரையிலுள்ள அரசூரில் 1 வாரம், சிதம்பரம், மன்னார்குடி, இப்படி சில இடங்களுக்குப் போய்வந்தோம். கோடை லீவு முடிந்து பாடசாலைகள் திறக்கப்பட்டன.

ஜகன்மோகினி

வருடச் சந்தா ரூ. 3.

தனிப்பிரதி அணா-4.

இசைப் பகுதி

ஏ. ராஜம்மாள்

திருமழிசைப்பிரான்

திருவேங்கட கீர்த்தனை

ராகம்: சங்கராபரணம்

தாளம்: ஆதி

குறிப்புளனக்குக் கோட்டியூர் மேயானை யேத்தக், குறிப்புளனக்கு நன்மை பயக்க—வெறுப்பனோ?
வேங்கடத்து மேயானை மெய்வினைநோய் எய்தாமல், தான்கடத்தும் தன்மையான் தாள்.
சென்று வணங்குமினோ சேணுயர் வேங்கடத்தை, நின்று வினைகெடுக்கும் நீர்மையால்—என்றும்
கடிக்கமல நான்முகனும் கண்மூன்றத் தானும், அடிக்கமல மிட்டேத்தும் அங்கு.

லகு	த்ரு	த்ரு
1. ; ஸ் நி — , த பா — ம க ம ப — , க ரீ	ஸா ஸ ம — , ம க ம	பா பா — பா பா
குறி — ப்புள — க்குக்கோ — . ட் டி	யூர் மே . — . யா .	னை . . — யேத்த
; ப ப — , ம கா — மா பா — தா நீ	ஸ் நி க் ரி — ஸ் நி ரி ஸ்	ஸ் நி த ப — ம க ம ப
கு றி — ப்புள — க்கு . . — நன்மை	ப . ய க் — க . வெ .	று ப் . . — ப . னோ
2. த நி — ஸ் ரி காமக — ரீஸநிதபபா — மகமப-கரீஸ	ஷெ — ஷெ	ஷெ — ஷெ
. . . — கு . றிப் . — . பு . ள . — க்கு.கோ-ட்டி		; ஸ் ரி
		கு .

அனுபல்லவி

லகு	த்ரு	த்ரு
1. ; பா — தபமக மாமா — பாபா — த நீ ஸ் ;	ஸ் ா — ரி நீ ஸ	ஸ் ா த ா — நீ ஸ் ா
. வே — ங்கடத்து — மே . — யா னை .	மெ ய் — வினை நோய்	எ ய் — தா மல்
2. ஷெ — ஷெ — ஷெ — ஷெ	ஷெ — ஸரிகமரிகஸா	ஷெ — ஷெ
	— வி...னை.நோய்	
; ம ப — ப த நி ஸ — ஸ நி த ப — தா நி	ஸா ஸா — ஸா ஸா	ஸ நி த ப — ம க ம ப
தான் — கடத்தும் — த ன் . . — மை .	யா . — . ன்	தா . . . — ன் . . . .
		தநி—ஸநி
		. —கு

சிட்ட ஸ்ரவம்

ஸா , ரி — ஸ நி த நி — ஸ ரி ஸ நி — த ப ம க | ம ப ம த — ப த ம த | ப ம க ப — ம க ரி ரி ||
ஸ தா நி — ஸ ரி க ஸ — , ரி க ம — ப க ம ப | த ப நி த — ஸ் நி ரி ஸ் | நி ஸ் த நி — ஸ் ா ; ||
ஸா ரிஸ — , நி ஸ் க — ரி கா ஸ் — ரி க ம க | ம க க ரி — , ரி ஸ நி | த நி ஸ க — ரீ ; ||
ஸ்க ரி.ம — க ரி ஸ நி — த நி த . ரி — ஸ நி த ரி | ஸா , ப — , , ஸ் நி | த ப , ம — க ம பா ||
த நி — ஸ ரி
. . — கு

சரணம்

1\. ; க ம — பா பா — பா பா — மா தா | பா பா — பா பா | க ம பா — கா ம ரி ||
சென் — று வ — ண ங் . . — கு வி | ணே . . — . . . | வே ங்க — டத்தை. ||

2\. ; த ா — தா தா — தா தா — தா த ப | பா தா நீ ஸ நி - த நி நி த | ப ம த ப — கா ம ரி ||
சென் — று வ — ண ங் கு — மி ணே. | சே . . . . — ஹு ய ர் | வே . ங்க — டத்தை ||

; கா — ம த ப ம — கா ம க — ரி நி ஸா | ; ஸ ம — கா ம ா | பா பா — பா பா ||
நின் — று . வி . — ளை கெ . — டு . க்கும் | . நீ ர் — மை யால் | என் — றும் ||

; ப ப — ம க மா — பா பா — த நீ ஸ | ; ஸா — ரி நீ ஸ | ஸா தா — நீ ஸா ||
கடிக் — க ம ல — நா ன் — மு க னும் | , க ண் — மூ ன் ற | த் தா . — . னும் ||

; ம ப — ப த நி ஸ — ஸ நி த ப — தா நீ | ஸா ஸா — ஸா ஸா | ஸ நி த ப — ம க ம ப ||
. அடிக் — க ம . ல — மிட் . . — டேத் | தும் — . . | அ . . — கு ||
த நி — ஸ ரி
கு . —

எதைப் படிக்கவேண்டும்?

வ்ஸுமதி ராமஸ்வாமி

சென்ற மோகினியில் எது உண்மை செல்வமென எழுதியிருந்தேன். அதைப் படித்த சினேகிதிகளிடமிருந்துஎழுந்த கேள்விக்கு நான் பதில் சொல்லித்தானே ஆகணும்? எம்மாதிரி புத்தகங்கள் படிப்பது? எந்த பாஷையில் படிப்பது? என்று கேட்கிருர்கள்.

எதைத்தான் படிக்காமலிருக்க முடியுமெனத்தான் பதில் சொல்லமுடிகிறது. நம்குடும்பங்களில் பெரியவர்களான பாட்டிகள் அத்தைகள் எவ்வளவோ அழகாக பாசுரங்களையும் ராமாயண சுலோகங்களையும், கிருஷ்ணகர்ணமிருத சுலோகங்களையும் மனப்பாடம் செய்திருப்பார்கள்! சிலருக்கு படிக்கத்தெரியாது. ஆனல் கர்ணபரம்பரையாக செவியில் புகுந்து மனதில் படிந்துபோன அந்த வாக்கியங்கள் நிலைபெற்றிருக்கும். அவர்கள் எளிய முறையில் வாழ்க்கையைவகுத்தவர்கள்; படிப்பதற்கென்று தனி அறை, விளக்கு, அதற்கென செலவு, அவகாசம் இவைகளை பிரித்து வாழ்க்கையின் தேவையை அதிகரிக்கச் செய்யத்தெரியாதவர்கள். கறி நறுக்கும் பொழுதும் வீட்டு வேலைகள் செய்யும் பொழுதும் தங்கள் பெரியவர்களிடம் சிக்ஷை பெறுவார்கள். மற்றைய வழக்கங்களை அந்தந்த தினங்களில் அதற்கேற்ற சட்டதிட்டப்படி அறிவார்கள். அவர்கள் கல்வியும், புத்தகமும் அப்படியாக வளம் பெற்றன.

ஆனல் 20-ஆம் நூற்ருண்டில் நாட்டில் அச்சு யந்திரங்களும் அழகான புத்தகங்களும் நாலா பக்கமும் குவிந்திருக்கின்றன. எதைப் படிப்பதென்று அறியாத நிலையில் மயக்கமாக இருக்கின்ருேம். அந்தக் குவியலில் குப்பைகளும் இருக்கின்றன. கோழியைப்போல் குப்பைகளை தள்ளி தானியங்களை, ரத்தினங்களை பொருக்க நாம் கற்கவேண்டும்.

ஒருவிதத்தில் நாம் தற்காலத்தில் இரண்டுங் கெட்டான் நிலையில் இருக்கிருேமென்று சொன்னல் மிகையாகாது. மேல் நாடுகளைப்போல் குழந்தைகளுக்கான அழகழகான இலக்கியம், அதற்கு ஏற்ற அழகான படம்போடும் சக்தி இவைகள் நமக்கு செய்யமுடியவில்லை. பழைய காலத்தைப்போல் கல்வெட்டுகளிலும், சுவடிகளும் நாம் படித்து அறியமுடியவில்லை. கர்ண பரம்பரையாக அறிந்துகொள்ள வர வர குடும்பத்து மூதாதையர்கள் குறைந்து வருகிருர்கள். வாழ்க்கை வேகம் அடைந்திருக்கிறது. தேவை அதிகரித்துவிட்டது. அதற்கேற்ற செல்வ நிலை யில்லை. எனவே பல விதத்திலும் சிக்கலாக காலத்தைப்போக்கவேண்டியவர்களாக இருக்கிருேம்.

எது எப்படியானலும் நம் ஹிந்துக்களின் உயிர் நாடியான கீதை புஸ்தகம் ஒன்று நம் எல்லாருடைய கைவசம் இருக்க வேண்டியது. இது நம்முடைய வாழ்க்கையின் கடமை. அதே பகவானிடம் அவரால் கொடுக்கப்பட்ட கட்டளைகளை செய்து ஒப்படைக்கும் தத்துவத்தையும் சொல்லிக்கொண்டு வருகிறது. கண்ணன் அர்ச்சுனனுக்கு மட்டும் உபதேசம் செய்யவில்லை. நாம் அனைவரும் அர்ச்சுனர்கள்தான். ஸமஸ்கிருதம் தெரிந்தால் தான் கீதை படிக்கவேண்டு மென்பதில்லை. தற்காலத்தில் சுலோகங்களை தமிழில் எழுதி அர்த்தமும் எழுதியிருக்கிருர்கள்.

அடுத்தபடியாக ராமாயண் புஸ்தகம்தான் இடம் பெறும். ராமாயணத்தை எவ்வளவு தடவை படித்தாலும் அலுக்காது. சந்திரனும் சூரியனும் நமக்கு அலுப்பையா கொடுக்கிறது? உலகத்து தம்பதிகள்யாவரும் ராமர் சீதைதான். ஆதர்ச தம்பதிகளின் சரிதம் நம்மை உயர்த்தும் சக்தி வாய்ந்தது. ஆதர்ச கணவன், பிள்ளை, அரசன், சகோதரன், நண்பன் என்று ராமரை அறிகிறோம். சீதையை, மேற்சொன்னபடி அறிகிறோம். இதை சித்தமாக வால்மீகி சொல்லியிருக்கிறார். பக்தியாக கம்பர் சொல்லுகிறார். இதில் எந்த பாஷை தெரிந்தவர்களுக்கும் அநேக புத்தகங்கள் வந்திருக்கின்றன.

பகவான் கூட உலகத்தை மூன்றடியில் அளந்தார். வள்ளுவர் ஒன்றரை அடியில் உலகத்தை அளந்திருக்கிறார். அவருடைய பாட்டு எல்லாம் ஒன்றரை அடிவாக்கியம். அதில் இல்லாத விஷயமில்லை. அதில் தர்மார்த்த காமமோக்ஷமான நான்கு நிலைகளை அழகாகச் சொல்லி இருக்கிறார். அவைகளில் அனேக உட்பிரிவுகள். அரசன் கடமை, வரி, மழை, தர்மம் இப்படியாக அநேக விஷயங்கள் தெளிவாக சொல்லியிருக்கிறார். சில காலத்துக்குமுன் இதற்கு பரிமேலழகர் உரை மட்டும் இருந்தது. ஆனால் இன்று அநேக புத்தகங்கள் தெளிவான அர்த்தத்துடன் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இன்று வாழும் நாம் ஒருவிதத்தில் மிகமிக பாக்கியம் செய்தவர்களென பெருமையுடன் சொல்லுகிறேன். கிட்டதட்டபாரதியார் காலத்தில் வாழுகிறோம். பாரதியாரின் அருமையான நூல்களை படிக்கும் பாக்கியம் பெற்றிருக்கிறோம். அநாயாசமாய் உல்லாசமாய் படித்து அறியக்கூடிய நிலையில் பாரதியார் அநேக விஷயங்களை உணர்ச்சியுடன் சமைத்துக் கொடுத்திருக்கிறார். கல்விக்களஞ்சியம் (என்ஸைக்ளோபிடியா)வைப் போன்ற ஒருசிறந்த நூல் பாரதியாரின் புத்தகங்கள். அதில் எல்லா வயதினருக்கும் எல்லாவித மக்களுக்கும் இன்பமூட்டும் பாட்டுகள் குவிந்திருக்கின்றன.

மேற்சொன்னபுத்தகங்கள் நம்முடனேயே இருக்கவேண்டியவை தினந்தினம் படிக்கவேண்டியவை: பிறருக்கு பரிசுகளாக ஞாபகார்த்தமாக வழங்க வேண்டியவை. நாம் எங்கேயாவது வெளியூர் போனால் தலையை சுத்தம் செய்ய சீப்பு, உடலை சுத்தம் செய்ய சோப்புக்கள், அழகான உடுப்புக்கள் இவைகளைப் பெட்டியில் அடுக்கி வைத்துக்கொள்ளுகிறோம். அத்துடன் நம் உடல் கூற்றில் மனம் என்ற பாகத்தை மறந்தே விடுகிறோம். அதிலும் அழுக்குகள் வந்து குடி கொள்ளும், அதை அவ்வப்பொழுது சுத்தம்செய்ய வேண்டியதும் இன்றியமையாத செய்கை என்பதை அறவே மறந்துவிடுகிறோம். நாம் அனைவரும் வழக்கத்திற்கு அடிமை; இனி துணிமணிகள்சோப்பு சீப்புகளுடன் மேற்சொன்ன புத்தகங்களையும் பெட்டியில் அடுக்கி வைப்பதுடன் உபயோகப் படுத்துவோம். மன அழுக்குமிக மிக கெடுதியை உண்டாக்கக் கூடியது. அதை சுத்தம் செய்யும் வாசனையுள்ள சோப்புத்தான் மேற்சொன்ன இலக்கியம். இவைகள் கையில் இருக்கவேண்டிய நூல்கள்.

இதைத்தவிர சிலப்பதிகாரம் போன்ற காவியங்கள் தமிழில் படிக்க இருக்கின்றன. இன்றைய உலகில் சிறுகதைகள் நிறைய

183172

வந்திருக்கின்றன. அவைகளில் படிக்கத் தகுந்தவைகளைப் படிக்கலாம். இன்னும் அந்தக் குவியலில் களை எடுக்கப்படவில்லை. ஆனாலும் பாதகமில்லை. சிறந்த எழுத்தாளர்களின் நாவல்கள் இருக்கின்றன. அப்படி தகுதியுள்ளதில் மோகினியின் ஆசிரியையின் நாவல்களும் இடம் பெறுகிறதென்பதை பெருமையுடன் சொல்லுகிறேன்.

இலக்கியங்கள் மற்ற பாஷைகளில் உயர்வானது இருந்தால் அதை நாம் போற்றத்தவறக்கூடாது. இதை பாரதியார் வற்புறுத்தியிருக்கிறார். மற்றபாஷை வசப்பட்டவர்கள் காளிதாஸரின் மகா காவ்யங்கள், ஆங்கிலத்தில் உள்ள ரஸ்கின், டுமாஸ், ஷேக்ஸ்பியர், கானண்டாயில் போன்ற மேதாவிகளின் இலக்கியங்கள், படிக்கத்தகுந்தவை. தாகூர், சரத்சந்திரர், பங்கிம்சந்திரர் முதலிய பெரியார்களின் வங்காளமொழி இலக்கியங்களும், மூலத்திலோ, மொழி பெயர்ப்பிலோ படிக்கத் தகுந்தவை.

பதினாறு அரியபேறுகளில் ஒன்றானது ரசிகத்தன்மை. இது வரை சொன்ன புத்தகங்களில் சில உள்ளத்தில் ஒளியுண்டாக்கும்; சில ரசிகத்தன்மையை உண்டாக்கும். அந்த வேகம் அதிகப்பட்டால் நூல் இயற்றும் ஆற்றல் உண்டாகிவிடுகிறது.

என் சிநேகிதிகள் கேள்விக்கு நான் சரியான விடை சொன்னதுபோல் ஆகாது: ஆனால் இக்கட்டுரை விடைசொல்ல முயற்சி செய்தது என்பதை அறிவீர்கள்.

Nothing new under the sky என்பார்கள். அதுபோல் இலக்கியம் புதிதல்ல. அதனுடையவழிகள் மாறிமாறி காலத்திற்கேற்ப வருகிறது.

வை. மு. கோ. நாவல்கள். (தற்போது கைவசமுள்ளவை)

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)
ரூ. 4.
சாந்தியின் சிகரம்
ரூ. 2-8
உணர்ச்சி வெள்ளம்
அமுதமொழி (கிளேஸ்)
மலர்ந்த இதழ்
ரூ. 2-4
தயாநிதி
ஞானதீபம்
வாழ்க்கைத் தோட்டம்
ரூ. 2.
வானக்குயில்
ஆத்ம சக்தி
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
மதுர கீதம்
அமுதமொழி (சாதா)
ஆசைப்ரவாகம்
வெளுத்த வானம்
மனத்தாமரை
அமரத்யாகி
ஜீவநாடி
பாதாஞ்சலி

ரூ. 1-12
அனாதைப்பெண்
புகழ்மாலை
இதய ஒலி
சிலாசாசனம்
வீராங்கனை
அமைதியின்
அஸ்திவாரம்
ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
இசைப்புயல்
காலக்கண்ணாடி
ஜயபேரிகை
நம்பிக்கைப் பாலம்
ரூ. 1-4
கோபாலரத்னம்
மகிழ்ச்சி உதயம்
புதுமைக்கோயில்
க்ருபாமந்திர்
ரூ. 1-2
படகோட்டி
அபராதி
ரூ. 1.
வீரவஸந்தா
நளினசேகரன்

மாலதி
வத்ஸகுமார்
பிரதிக்ஞை
ப்ரார்த்தனை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா
அணா. 12.
பக்ஷமாலிகா
சுடர்விளக்கு
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
அணா. 8
உளுத்த இதயம்
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்

தைரிய லக்ஷ்மி

வை. மு. கோ. 106-வது நாவல்

★

உலகத்திலில்லாத விசித்திர குணம்படைத்த மேதாவி உன் மாமனார். மோரக்கட்டையைப் பாரு. கல்யாணத்திற்கு முன்பு ஒரு வார்த்தை. கல்யாணத்திற்குப் பின்பு ஒரு வார்த்தையா? 5 ஆயிரம் ரூபாய் வரதக்ஷிணை ரொக்கமாகக் கொடுப்பதாகச் சொன்னான். ஏதோ கல்யாணத்தில் அஸாத்ய செலவாகிவிடுவதால் இரண்டாயிரம்ரொக்கம் முதலில்கொடுப்பதாயும் மூவாயிரம் ரூபாய் பிறகு பெண்ணைக் கொண்டுவிடும் போது கூடவே கொடுப்பதாயும் சொன்னான். போனால் போகிறது என்று விட்டுக்கொடுத்தேன். பஞ்சப்பயல். இன்று பழைய பல்லவியையே பாடி பல்லை இளித்துக் கடிதம் எழுதியிருக்கிறான் பாரு. பெண்ணை நாம் சொல்லிய முகூர்த்தத்தில் கொண்டுவிட்டுவிடுகிறானாம். பணம் மட்டும் இன்னும் ஆறு மாதம்; ஒரு வருஷத்தில் கொடுக்கிறானாம். வேணுமானால் ப்ரோ—னோட்டு எழுதிக்கொடுக்கிறானாம்! முட்டாள் பயல். எத்தனை திமிருடன் இப்படி எழுதியிருக்கிறான் பாருடா? கண்டிப்பாய் அவன் கொழுப்பை அடக்கியே தீரப்போகிறேன். அன்று மூவாயிரம் ரூபாய் ரொக்கத்தைத் தவிர சீர்வகைகளுடன் பெண்ணை அழைத்துவந்தால் வரலாமேயன்றி மற்றபடி வருவதில் உபயோகமில்லை! என்று கண்டிப்பான கடிதம் எழுதிவிட்டேன். நீ கட்டாயம் என் வார்த்தைக்குக் கட்டுப்பட்டே தீரவேண்டும். அசட்டுப் பிசட்டென்று ஏதாவது செய்துவைத்தால் தெரியும் சேதி!—என்று மிகவும் சாதுவான தன்மகன் வைத்யநாதனைப் பார்த்து அவன் பிதா பரமேச்வரன் கூறினார்.

வைத்யநாதன் இயற்கையிலேயே நல்ல அடக்கம், ஒழுக்கம், பெரியார்களிடம் கட்டுப்பட்டு அடங்கி நடக்கும் தூய குணம், பக்தி முதலிய சகல அம்சங்களும் பொருந்தியவன். தான் படிக்கும் ஒவ்வொரு புத்தகத்திலுள்ள நீதிகளின்படி கூடுமானவரையில் வழுவாமல் நடந்துவருகிற முறையை மேற்கொண்டவன். அடக்க ஒழுக்கமான பையனாக விருப்பினும் தனக்கு மனைவி வெகு ஜோராய் வரவேணும்; அவளுடன் அன்யோன்யமாய் வாழவேண்டும்—அவளை சிறந்த மேதாவியாகச் செய்து இன்புறவேண்டும். என்றெல்லாம் கனவுகண்டு எதிர்பார்ப்பான். ஏதோ கடவுள் அருளால் இவன் கனவு நனவாகியதுபோல் தற்கால நாகரீகப்படி S. S. L. C. பாஸ் செய்த ஒரு அழகான யுவதி கண் நிறைந்த எழிலும் சங்கீதச் செல்வமும் ஒருங்கே அமையப் பெற்ற நந்தினி கிடைத்ததும் பரம த்ருப்தியடைந்துப் பூரித்தான்.

ஆனல் அந்தச் சந்தோஷம் அதிக நாள் நிலைக்க விடாமல் சிதறவடிக்கப் பாழும் பணத்திரை குறுக்கே மலை போல் விழுந்துவிட்டதுபோன்றும் எரிமலையே தலைமீது விழுந்ததுபோன்றதுமான வார்த்தைகளைக் கேட்டு மனது துடித்தது. இத்தனை காலமாகத் தன் பிதாவுக்கு எதிர்த்துப் பதில் பேசியறியாதவனாயினும் இன்று அவனையறியாது பேசி விடவே ஆத்திரம் துடிக்கின்றது. இயற்கையிலேயே தன் பிதா ருத்ரமூர்த்திபோன்றவர் என்பது நன்ருகத் தெரியும். தான் ஏதாவது சொல்லிவிட்டால் வீண் ரஸாபாஸமாகி ஊர் சிரித்துவிடுமே! என்று அச்சம் வேறு பாதிக்கிறது.

தகப்பனாரும் பிள்ளையும் இருக்கும் நிலைமையைக் கண்ட அவன் தாயாராகிய தங்கம்மாளுக்கு உள்ளூற பயம் நடுக்கு கிறது. அவள் மகா விவேகி, மானவதி, உறத்துப் பேசியறிய மாட்டாள். யௌவன பால்யத்தின் ரோஷத்தினல் வைத்ய நாதன் ஏதாவது அசட்டுத்தனமாய்ப் பேசிவிடப் போகிருனே என்ற பயத்தால் மறைவாக நின்று மகனையே உற்று நோக்கி, "எதிர்த்துப் பேசாதே, சாந்தியை இழக்காதே, பொறுமையா யிரு. எல்லாம் சரியாகிவிடும். நான் எப்படியாவது வழி செய்கிறேன்" என்று ஜாடையினுலும் மெல்ல உதட்டை மட்டும் அசைத்தும் பேசி மகனுக்குத் தெரிவித்தாள்.

தாயின் அன்புக்கு அபாரமாகக் கட்டுப்பட்டவனுகை யினல் அந்த ஜாடையை அறிந்து நடுங்கினன். தாயாரின் வார்த்தைக்குக் கட்டுப்படுவதா? அல்லது தந்தையின் பிற் போக்கான செய்கைக்கு எதிர்த்துப் பேசுவதா? என்ன செய் வது? என்று பெரிய குழப்பம் உண்டாகிவிட்டது. தகப்ப னாரை மீறிக்கொண்டு தான் ஏதாவது செய்துவிட்டால் பிள வும் சண்டையும் தாயாருக்கும் தகப்பனாருக்குமே மனஸ்தாப மும் உண்டாகி பார்ப்பவர்கள் சிரிக்கும்படியாகிவிட்டால் என்ன செய்வது. அம்மாவுக்கு ரோஷமும் அதிகம், மான மும் மரியாதையும் அதிகம். அதோடு பலவீனப்பட்டு துர்பல மானவள். இந்த நிலைமையில் அவளுக்கு ஏதாவது அதிர்ச்சி உண்டாகிவிட்டால் என்னசெய்வது? என்று உட்கார்ந்த இடத் திலேயே அசையாமல் பலபல எண்ணங்களுடன் குழம்பித் தவித்தவாறு தகப்பனாருக்குப் பதில் பேசாமலிருப்பதைக் கண்ட அவர் பிதா பின்னும் கோபமே அடைந்து "என்னடா? ஏதோ பெரிய கோட்டையைப் பிடிப்பவன்போல் யோசனை செய்தவாறு பதில் பேசாதிருக்கிருய்? இங்கு பேசுகிறவன் மனிதன் பேசுவதாக எண்ணுகிருயா? கழுதை கத்துவதாக நினைத்தாயா? டேய்! இந்த மவுனத்திற்கும் யோசனைக்கும் காரணம் எனக்குத் தெரியுமடா, தெரியும். 'இவன் எப்படி யாவது உளறிக்கொண்டு போகட்டும். நாம் ரகஸியமாய் மாம ஞர் வீட்டிற்குப்போய்விடுவோம்!' என்று சூழ்ச்சிசெய்கிருயா?

டேய்! இந்த உயிர் இந்த உடலில் இருக்கும் வரையில் அந்த காரியம் நடக்காதடா! நடக்காது. அம்மாதிரி நீ செய்தாயானால் உனக்கும் எனக்கும் இதோடு கண்டிப்பாக விட்டுப் போயிற்று என்று எண்ணி விடடா! இதற்கெல்லாம் பல் இளிக்கும் பேர்வழி இந்தப் பரமேச்வரன் இல்லையடா? அதை முதலில் தெரிந்துகொள்ளு. பெற்றோரை த்வேஷித்துக் கொண்டும், அல்லது தானே அந்தப் பணத்தைக்கொடுத்து அவர்கள் சீர்செய்ததுபோலும் பணம் கொடுத்ததுபோலும், அல்லது திருட்டுத் தனமாக மாமியார் வீட்டிற்குச் சென்று உறவாடி தகப்பனாராகிவிடுவதும், இதுபோல் எத்தனையோ விஷயங்களை நான் கதைகளில் படித்திருக்கிறேன். அம்மாதிரி ஏதாவது இங்கு கையாண்டால் தெரியும் சேதி. ஆமாம்! கண்டிப்பாக நான் சொல்கிறேன். நாணயமாய் அந்த மனிதன் சொல்லியபடி பணத்துடன் பெண்ணையும் சீரும் சிறப்புமாகக் கொண்டுவிடட்டும். பிறகு ஆக்ஷேபணையே இல்லை. வீண் பூச்சிமிறட்டல் மிறட்டாதே!'' என்று கடுங்கோபத்துடன் கூறினான்.

வைத்யநாதன் தன்னைத்தான் எத்தனைக்கட்டுப்படுத்திக் கொண்டும் அவன் உள்ளத்தில் பொங்கும் ஆத்திரமும் கோபமும் அடங்காது பீறிக்கொண்டு வந்த வேகத்தில் ''அப்பா! நல்லது. ஒரு மகனுடைய சந்தோஷ வளர்ச்சிக்கு ஒரு பிதா எத்தனை பாத்யப்பட்டவர், எத்தனை அக்கரையும் அன்பும் கொண்டவர் என்பதை நன்றாகப் பாடம்கற்றுக்கொண்டேன். குடும்ப ஐக்யத்திற்கும் பிறர் பார்த்து மகிழ்ந்து பின்பற்றி நடக்கவேண்டிய உத்தம மார்க்கத்தில் ஒழுகுவதற்கும் நான் கடமைப்பட்டவன். ஆகையால் உங்களுடைய, முக்யமாய் என்னருமைத் தாயின், மனங்கோணாது நடக்கக் கங்கணங் கட்டிக்கொண்டவன் நான் என்பதை மறக்கவேண்டாமப்பா! தாங்கள் இந்த அனாவச்யமான கல்யாணத்தையே செய்யாமல் இருந்திருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும். வீணான பாபம், பழி, பரிகாஸம், ஏச்சுப் பேச்சு, தலைகுனிவு முதலிய எத்தகைய அம்சத்திற்கும் இலக்காகாமல் ஒரே நிலையான சந்தோஷத்துடன் இருக்கலாம்...சரி நான் வருகிறேன். ரயிலுக்கு நேரமாகிவிட்டது''...என்று துடிதுடிக்கக் கூறிவிட்டுத் தந்தைக்கு நமஸ்காரம் செய்துபின் தாயாரின்காலைத் தொட்டு வணங்கி, ''அம்மா! நான் என்றும் உன் அன்பிற்குக் கட்டுப்பட்டவன். அப்பாவை எதிர்த்து எதுவும் செய்துவிட மாட்டேன். குடும்ப கண்ணியத்தைச் சிதைத்துக்கொண்டு சந்தோஷமனுபவிப்பதானது நரகவேதனைக்கும் மேம்பட்டது என்பது எனக்குத் தெரியும். கதைகள் படிப்பதும், நாடகங்கள், சினிமாக்கள், பார்ப்பதும் மக்கள் புத்தி விசாலித்து நல்ல நீதி போதனையைக் கற்று வாழ்க்கைப் பாதையைச் செப்

பணிட்டுச் சரியானமார்க்கத்தில் நடப்பதற்காகவே சிலசத்குண சீலர்கள், அனுபவஞானிகள் பக்திரஸம்இதயத்தில்தோய்ந்த உத்தமர்கள் எழுதுகிறார்களேயன்றி பிறர் கெட்டுப்போவதற்காக எழுதவில்லை.

ஆனால் கலியின் கோரதாண்டவத்தில் நாஸ்திகத்தைப் பரப்பி ஆஸ்திகத்தை யழித்துஜாதிமத மகிமைகளை ஒழித்து, நீதி நியாயம், பழக்கவழக்கம், தர்மம் முதலிய உயர்ந்த லக்ஷியங்களைத் தாக்கியும் உதவாக்கரை விஷயங்களை ப்ரசாரம் செய்தும் மதத்வேஷங்களைக் கிளப்பியும் வீணான கலகப்புரட்சிகளைப் போதித்தும் மக்களின் அறிவைக் கெடுத்துக் குட்டிச் சுவராடிக்கும்முறையில் ஒருசிலர் புத்தகங்கள்எழுதியும் அந்தக் கொள்கைகளைத் திரைப்படமாக்கியும் அதீதஉணர்ச்சியில் நாட்டைநாசம்செய்யவும்முன்வந்திருக்கிறார்கள், ஆனால்அவைகளுக்கு இதயத்தில் இடங்கொடுக்கும் கோழை, அறிவிலி உன் மகனல்ல,உன்னுடைய பவித்திரமான உதிரத்தில்ஊறியதனால் என்னிடம் மேல்குறித்த பேய்கள் கிட்ட அணுகாது நீகவலைப் படாதே: நான் வீண் புரட்சி செய்யும் கலாட்டா மனிதனில்லை. போய் வருகிறேன்...அப்பா என்னை ஒரு பண்டமாக மதித்து விலை கூறி விற்கத்துணிந்து 5 ஆயிரத்துக்குப்பேசி விற்றுவிட்டார். இந்த விலைவார்த்தை முன்பே தெரிந்திருந்தால் கல்யாணத்திற்கேஇசைந்திருக்கமாட்டேன். விற்ற பண்டத்தின் பாதிக்ரயந்தான் வந்தது. மிச்சக்ரயமும் வந்த பிறகு அப்பாவின் இஷ்டப்படி நடக்கட்டும்! இந்த வரதக்ஷிணைப் பேய் நம் நாட்டைவிட்டு என்று ஒழியப்போகிறதோ! அன்றுதான் நம்முடைய புனிதமான சமூகத்தில் உண்மையான சந்தோஷம் நிலவி மக்களின் இதயங்கள் இன்பக்கடலில் உல்லாஸ பவனி வரும்! இதையொழிக்க எந்தத் தீவிரவாதியும் சட்டம் கொண்டு வரத்துணியவில்லை! ஏன்! தன் மகனையும் பெண்வீட்டாரிடம் விலை கூவி வ்யாபாரம்செய்வதற்குப் பங்கம் உண்டாகிவிடுமல்லவா.....

என்று தாயாருடன் ஆத்திரமாகப் பேசும் மகனைக்கண்டு பரமசிவனுக்கு உண்மையில் முக்கண்ணமூர்த்தியைப்போன்று கோவம் வந்துவிட்டதால் வாயில்வந்தபடிதாறுமாறாகத் திட்டிவிட்டு ஒரே ஓட்டமாகச் சென்றுவிட்டார்! பாவம் தங்கம்மாவுக்கு அபாரமான பயம் உண்டாகி நடுக்கலே எடுத்துக் கொண்டது. "அம்பி! என் எத்தனை சொல்லியும் உன்னை நீ அடக்கிக்கொள்ளாது பேசிவிட்டாயே! அப்பாவின்மூர்க்கத்தனமும் அசட்டுப் பிடிவாதமும் உனக்குத் தெரியாதா! நீயும் ஊருக்குப் போய்விடப் போகிறாய். உன் பிதாவின்முறைப்புக்கு என்னால் சமாளிக்கும் சக்தி இல்லையே! என்னசெய்வேன். நீயாவது சற்று அடங்கிப்போகக் கூடாதா? என்று கண்ணீர் விடுவதைக் கண்ட வைத்தியநாதன் மனது உருகிவிட்டது.

அம்மா! ஏதோ அறியாத்தனமாய்ச் சொல்லிவிட்டேன். உன்னைப்போல் அந்தப் பெண்ணைப் பெற்ற தாயும், பெண்ணும் கலங்குவார்களல்லவா! என்று நினைத்தபோது நான் சற்று தவறிவிட்டேன். மன்னித்துவிடு. அப்பாவை நானே சமாதானம்செய்து அழைத்து வந்துவிட்டுவிட்டுப்போகிறேன். சரிதானும்மா என்று பணிவுடன் கூறியவாறு சொன்னான். முன்னறிதெய்வங்களை மனம்நோகவைப்பதுபாவமா? முன்பின்னறியாது என்னை மாலையிட்டு என்னால் எத்தனையோ சந்தோஷத்தையடையஇரவுபகல் எதிர்பார்த்துஏங்கும் நந்தினியின்மனத்தைநோகவைத்து அதனால் அவள்பெற்றோர்களும்கலங்கித்தவிக்கச்செய்வது பாதகமா? என்னதர்மசங்கடமானநிலைமையில் என் பிழைப்பு வந்துவிட்டது! என்று அவன் உள்ளம் துடித்தது. எனினும் முன்னறிதெய்வமாகிய தன் அன்னையின் மன அமைதியைத்தான் முதலில் கவனிக்கவேண்டும் என்று தோன்றியதால் உடனே தகப்பனார்சென்றுள்ளவிடத்திற்குஓடி அவரைச் சமாதானம் செய்துத் தேற்றி அழைத்துவந்து தன் தாயாரிடம் சேர்த்துவிட்டு அவன் ரயிலுக்குச் சென்றான். அவன் இதயத்தில் கவலை என்கிற மேகம் கப்பிக்கொண்டது.

2

அவன் இதயத்தில் கவலை என்கிற மேகம் கப்பிக்கொண்டது. கண்களில் மழைபெய்வது போல் கண்ணீர் பெருக சுப்ரமண்யன் கடிதத்துடன் மனைவியிடம் வந்து கடிதத்தைக் கொடுத்தான். நாகலக்ஷ்மி கடிதத்தைப் படித்துவிட்டு கவலையே படவில்லை.

உம்! இதென்ன ப்ரமாத அதிர்ச்சியா என்ன? இம்மாதிரி பதில்தான்வரும் என்பது நான் எதிர்பார்த்தவிஷயந்தான். எனக்கு இதனால் கவலையே இல்லை; நான் சமயம்வரும்போதெல்லாம் சொல்லிக் காட்டுவதைவிடப் போவதில்லை. இதே வரதக்ஷிணைவலையை நீங்களும் உங்கள் மூத்தமகன்விவாகஏரியில் வீசி வரதக்ஷிணை என்கிற பக்கா மீன்களைப் பிடித்த பேர்வழிதானே? நான் அப்போதும் இந்தப் பிசாசுவேண்டாம் என்று சொன்னது மறந்துவிட்டதா? அப்போது சற்றும் எதையும் லக்ஷியம் செய்யாது இறுமாந்திருந்த நிலைமையில் செல்வமும் சீர முடுக்கும் ஒத்தாசை செய்தது. என் பேச்சு எறுமல் சமுத்திரத்தில் கரைத்த சர்க்கரையைப்போல் ஆகிவிட்டது. அந்த உணர்ச்சியை இப்போது நினைத்துப்பார்க்கிறது தானே? சமூகத்திலுள்ள ஊழல்களை சமூகத்தவர்கள்தான் சேர்ந்து களைந்தெறிய வேண்டுமேயன்றி மற்றவர்கள் வருவார்களா? கட்டுப்பாடாக வரதக்ஷிணை அரக்கனை ஒழிக்க வேண்டுமென்று கங்கணங் கட்டிக்கொண்டு உழைத்தால் ஒரு சிறிதா

வது குறையாமலா போகும். நீங்கள் கூசாமல் 5 ஆயிரம் வாங்கியதுபோல் இப்போது கடைசி பெண்ணுக்கும் கொடுத்துக் கடனைத் தீர்த்தால் பெண் சந்தோஷப்படுவாள், இல்லாவிட்டால்...

என்று முடிப்பதற்குள் வெகு தைரியமாய் இவர்களின் மூத்த மருமகள் அங்குவந்து மாமியாரை நோக்கி, "அம்மா! எங்க அப்பாவும் இப்படித்தான் தவித்துத் தண்ணீராய் உருகி எங்கள் வீட்டையே அடகுவைத்து 8 ஆயிரம் ரூபாய் கடன்வாங்கி 5 ஆயிரம் உங்களுக்குக் கொடுத்துப் பின் மூவாயிரம் கல்யாணச் செலவு செய்தபிறகு மேலே மேலே ஏற்பட்ட செலவின் பயங்கரச் சுழலில் வீடு கடனில் மூழ்கிப்போய்விட்டதை நீங்கள் அறியவில்லை. இப்போது சந்தர்ப்பம்வரும்போது சொல்லிக்காட்டவேண்டும் என்று சொல்கிறேன். அப்பாவின் கதியைக் கண்டு நான் என்னதான் தவித்தேன் தெரியுமா? இந்த அவமானம் தாங்காதுதான் அம்மாவும் அப்பாவும் உலகையேவிட்டு மறைந்தார்கள்." என்று கண்ணீர்ப் பெருகச் சொல்லிவிட்டுச் சடக்கென்று உள்ளே போய்விட்டாள்.

இதைக்கேட்ட சுப்ரமண்யத்தின் மனம் பின்னும் பாகாய் உருகியது. முதலிலிருந்த நிலைமையும் மூடுக்கும் இப்போது அடங்கிவிட்டதல்லவா! நான்கு பெண்களுக்கும் விவாகத்தைச்செய்து ஓட்டாண்டியாகிவிட்ட சமயம் மூத்த மகனின் கல்யாணம் ஒரு கறவை மாட்டைக் கறந்து உரிவதுபோல் சம்மந்திகளை உரிந்துவிட்டார். பிறகு பிள்ளைகளின் படிப்பு, மூத்த பெண்களின் மற்றபடியான செலவுகள்—எல்லாம் மனிதனை அடியோடு ஆட்டிவிட்டதால் நந்தினியின் கல்யாணம் எப்படியாவது முடிந்து அவளைக்கொண்டு தள்ளிவிட்டால் போதும் என்ற எண்ணத்துடன்தான் இருந்தார். 'ஏதோ நல்ல இடம், உயர்ந்த குடும்பம், பெரிய படிப்பு, அழகான பிள்ளை—ஒரே பிள்ளை, நந்தினியை நன்றாக நடத்துவார்கள்' என்றெல்லாம் கனவு கண்டு கடனை வாங்கியாவது கல்யாணத்தைச்செய்துவிடவேண்டும். இந்த வரன் தப்பினால் இம்மாதிரி கிடைக்காது என்கிற ஆசையால் துணிந்து இறங்கிவிட்டார்.

தனக்குள்ள சகல சொத்துக்களும் அடமானத்தின் சங்கிலியில் ஊசலாடும்போது துணிந்து யார் கடனைக்கொடுப்பார்கள்? கல்யாணத்தின்போது எப்படியோ நடந்துவிட்டது. இப்போது தானே திண்டாட்டம் அதிகமாகி வதைக்கிறது. தவித்துக்கொண்டே இருக்கையில் நந்தினி வந்தாள். "அப்பா! கடிதத்தை அம்மா காட்டினாள், நானும் பார்த்தேன். இதென்ன அசட்டுத்தனம்; எனக்காக நீங்கள் கண் கலங்க வேண்டாம். நான் ஒரு பிள்ளை என்று எண்ணிவிடுங்கள்; அவர்கள் இத்தகைய ஈவிரக்கமற்ற கொடுமை செய்வார்கள் என்று தெரிந்திருந்தால் உலகத்தில் எத்தனையோ பேர்கள்

கல்யாணமே இல்லாதிருக்கிறார்களே, அதுபோல் நானும் இருந்திருக்கலாம். இப்போதும் பாதகமில்லை. என்னை ஸ்காலர்ஷிப்பில் காலேஜில் சேர்க்க ஏற்பாடுசெய்து அனுப்பிவிடுங்கள். அவர்களுக்கு மனது இரங்கிவந்து அழைக்கும்போது நான் போகிறேன். வீணாகக் குழம்பித் தவிக்கவேண்டாம். கடன் என்கிற கடலில் கரைகாணாது தவிப்பது போதும். இனி அவைகளை விற்றுக் கடன் தொல்லையைத் தீர்த்துக்கொண்டு சுகமாக வாழுங்கள்; வீணான யோசனை வேண்டாமப்பா. நான் செய்த பாவந்தான் உங்களை ஆட்டுகிறது. இப்போதுள்ள நிலைமையில் பிடிவாதமாய் என்னைக் கொண்டு விட்டுவிட்டு வந்தால் அது ரஸாபாஸமாக முடியும். திரும்பவும் அவர்கள் என்னைக் கால்பந்து ஆடுவதுபோல் இங்குக்கொண்டு தள்ளினால் என்ன செய்வது? அல்லது மகனிடம் என்னை அனுப்பாமல் வேலைக்காரிபோல் வைத்திருந்தால் உங்கள் மனம் சகிக்குமா? அது அழகா? ஊரார்தான் என்ன சொல்வார்கள்.

அல்லது பட்டிணத்தில் அவர் தனியாக இருக்குமிடத்திற்கு நீங்கள் கொண்டுவிட்டால்மட்டும் திருடன் வாழ்வது போல் திருட்டு வாழ்க்கைதானே வாழவேண்டும்? அது இனிக்குமா? அதனால் அவருக்குத்தான் என்ன சந்தோஷம்? நான் சகலத்தையும் அலசிப்பார்த்துவிட்டுத்தானப்பா சொல்கிறேன். இனி இரண்டாங்கல்யாணத்திற்கு அவர்கள் துணிய முடியாது. சட்டம் அதற்கு வேலிபோட்டிருக்கிறது; ஆகையால் பயப்படவேண்டாம்! அப்படி யாராவது ரகசியமாய் விவாகம் செய்துவைக்கவும் பெண் கொடுக்கவும் முன்வந்தால் நானே நேரில் சென்று என்னை விளம்பரப்படுத்தி அதைத் தடைசெய்கிறேனப்பா! நான் இத்தனை நேரம் என் சினேகிதை சீதாவிடம்போய்ப் பேசிக்கொண்டிருந்தேன்; அவள் பிதா எனக்கு ஸ்காலர்ஷிப்பு வாங்கிக்கொடுப்பதாயும் தன்னாலான உதவி செய்வதாயும் சொன்னார். ஆனால் இந்த விஷயங்கள் ஒன்றும் அவருக்குத் தெரியாது. நான் படிக்க ஆசைப்படுவதாக அவரிடம் கேட்டேன். நீங்கள் கவலையே படவேண்டாம். இக்கடிதத்திற்கு பதிலும் எழுதவேண்டாம்; நானும் இனி அவருக்கு எழுதப்போவதில்லை. என்ன நடக்கிறதோ பார்க்கலாம், நீங்கள் என் படிப்புக்காக ஏற்பாடு செய்யுங்கள்.

அப்பா! இந்த அனுபவத்திலிருந்தாவது இனி இருக்கும் பிள்ளைகளுக்கு வரதக்ஷிணை வாங்காது விவாகத்தைச்செய்து காட்டுங்கள். இந்தக் கொடிய பழக்கத்தைக் குழிதோண்டிப் புதைக்கக் கங்கணங்கட்டிக்கொண்டு ப்ரசாரம் செய்யுங்கள்'' என்று படபடத்துக் கூறினாள்.

தன் மனைவி, மருமகள், மகள் மூவரும் இம்மாதிரி சுடச் சுடப் பேசுவார்கள் என்று இவர் சற்றும் எதிர்பார்க்கவில்லை யாதலால் இன்னது செய்வதென்று தோன்றாமல் விழிக்கிறார். பெண் சொல்கிறபடி பேசாதிருந்துவிடலாமா? அப்படி இருந்தால் ஊரார் என்னசொல்லுவார்கள்? 'பெண்ணை வாழவிடாமல் இம்மாதிரி செய்வது அழகா?' என்று ஏசமாட்டார்களா? ஒரு பெண் இம்மாதிரி வீட்டோடு இருப்பதால் மற்ற பிள்ளைகளுக்கு மதிப்புடன் பெண் கொடுக்க வருவார்களா? மருமகப் பிள்ளைகள்தான் மதிப்பார்களா? என்கிற கலக்கம் உண்டாகி விட்டதால் ஒருவருக்கும் எத்தகைய பதிலும் சொல்ல முடியாமல் தடதடவென்று வெளியே சென்றார். ஒவ்வொருவருடைய வார்த்தையும் அவருடைய செவியில் ஒலித்து இதயத்தைத் தாக்கியது.

3

தடதடவென்று வெளியே சென்றான். ஒவ்வொருவருடைய வார்த்தையும் அவன் செவியில் ஒலித்து இதயத்தைத் தாக்குகிறது. இதென்ன போராட்டமான வாழ்க்கை. தனி அறையில் இருந்தாலும் நிம்மதி இல்லை. சினிமாவுக்குச் சென்றாலும் அங்கும் கதையில் வரதக்ஷிணையின் கொடுமையைப்பற்றிய ஓலந்தானா? அதில்வரும் ஒவ்வொரு நபரும் சுடச்சுடச் சொல்லும் வார்த்தைகள் என்னை கையாண்டி செய்துக் குத்திக் காட்டி ஏளனமாகச் சிரிப்பதுபோலல்லவா தோன்றுகிறது. சீச்சீ ! இந்தப் பேயின் தாண்டவத்தைச் சினிமாவில் பார்த்தால் என்ன ! நாடகத்தில் பார்த்தால் என்ன! மக்களுக்குப் புத்திவரப்போகிறதா என்ன! இக்கொடிய வரதக்ஷிணை முன்பெல்லாம் ப்ராமணர்கள் சமூகத்தில் மாத்திரம் தாண்டவம் செய்ததாகவும் மற்ற வகுப்பாரிடம் இல்லை என்றும் சொல்வதுண்டு. இப்போதா! அடேயப்பா! சர்வ ஜாதியிலும் புகுந்து அந்தப் பேய் எக்காளமிட்டு உறுமுகிற கோரமை என்றுதான் மறையப்போகிறதோ!

மாதங்கள் ஓடி மறைந்து ஒரு வருஷ காலமும் ஆகிவிட்டது. என் வாழ்க்கைப் பாதையிலிருந்து ஒரு அடிகூட எடுத்துவைக்கும் மாறுதல் உண்டாகவில்லை. நான் லீவுக்குப் போகாததால் அம்மாதான் வருந்திக் கடிதம் எழுதியிருக்கிறாளேயன்றி அப்பா எத்தகைய சந்தடியும் இல்லாமலிருக்கிறார். நந்தினியும் அப்பாவின் அந்தக் கடிதத்திற்குப் பிறகு ஒரு கடிதங்கூட எழுதவில்லை. அவள் காலேஜில் சேர்ந்து படிப்பதாகச் சிலர் சொல்கிறார்கள். சிலர், 'வீட்டில் தண்டப் பொழுது போக்கும் நீ எங்களுக்கு ஒத்தாசைக்கு வந்திரு'

என்று உடன்பிறந்த சகோதரிகள் இளப்பமாகக் கூறுவதாக வும் அதனால் இவள் குன்றிவிட்டதாயும் சிலர் சொல்கிறார்கள். எது நிஜமோ? எது பொய்யோ! நிம்மதியற்ற மனத்திற்கு விமோசனந்தான் எது? என்று வைத்யநாதன் பாதிசினிமாவி லிருந்து எழுந்து தன் தனியறைக்கே வந்து சேர்ந்தான்.

அன்றைய மாலைப் பத்திரிகை அப்போதுதான் வந்தது. வழக்கப்படி பத்திரிகையைப் பிரித்தான். அதில் பலபல விஷ யங்களும் புகைப்படங்களும் இருந்தன. அவைகளில் ஒன்று வேஷங்களணிந்த சிலமாணவிகள் ஏதோநாடகம்நடித்தபோது எடுத்த புகைப்படமும் அதன் விவரமும் கீழே குறிப்பிடப் பட்டிருந்தது.

மகாத்மாஜி கல்லூரியில் வருஷாந்திர விழா கவர்னர் தலை மையில் நடந்தது. அக்கல்லூரி மாணவி நந்தினிவைத்யநாதன் என்கிற மாதரசி "வரதக்ஷிணை பூதம்" என்கிற கதையைத் தானே எழுதி தானே கதாநாயகி பாத்திரம் ஏற்று நடித் தார்கள். அந்த நாடகத்தின் பாத்திரங்கள் மற்ற மாணவிகள். மத்தியில் இருப்பவர் கவர்னர் ஜோதராய். பக்கத்தில்இருப்பவர் கல்லூரி ப்ரின்ஸிபால். இந்த நாடகம் மிகவும் நன்றாயிருந்த தாகவும் வரதக்ஷிணை பூதம் உலகத்தையே உறிஞ்சு அழிக்க வந்திருக்கும் காளகோடி விஷத்திற்குச் சமமானது என்றும் அந்தக் கொடிய பூச்சி எப்படியோ நம் சமூகத்தில் புகுந்து விட்டதென்றும், அதை அடியோடுவிரட்டியடித்து அதற்கு முற்றுப் புள்ளிவைத்து சாவுமணி யடித்துவிடவேண்டும் என் றும் ஸ்ரீமதி நந்தினி வைத்யநாதன் ச்ருஷ்டித்த கதை மிகமிக ஸ்வாரஸ்யமாயிருந்ததோடு அவர் நடித்த நடிப்பு அபாரமாய் உணர்ச்சி ததும்ப காண்போர்களின் இதயத்தைத் தொட்டுக் கண்ணீரைக் கக்கவைத்து ஆட்டிவிட்டது என்றாலும் மிகை யாகாது. அந்தக் கதையில் சொல்லியபடி இக்கொடுமையை ஒழிக்க சட்டம் அவச்யம் கொண்டுவரவேண்டியதுதான் என் பதை நான்கூட ஒப்புக்கொள்கிறேன். சீக்கிறத்தில் அம்மாதிரி யொரு நல்லகாரியத்தைப் பொதுமக்கள் ஒன்றுகூடிச் செய்யத் தூண்டி சட்டமாக்கப் பாடுபடவேண்டும் என்றும் கவர்னர் பேசினார்: காலேஜ் ப்ரின்ஸிபால் ஸ்ரீமதி சகுந்தலாதேவி நந்தினி வைத்யநாதனைப் பாராட்டிப் பேசி அவருக்கு மாலை சூட்டினார்.

என்று வரைந்திருந்ததைப் படிக்கப்படிக்க வைத்யநாத னின் கண்ணீர் கட்டுமீறி வழிந்தோடுகிறது. நந்தினி வைத்ய நாதன்! என்னபொறுமை! வேண்டாமென்றுவிலக்கிய என்னைத் திரஸ்கரித்துத் தள்ளிவிடாமல் தற்கால நாகரீகத்தையொட்டி என் பெயரைக் கூடசேர்த்துக்கொண்டிருக்கிறாளே? இதை அப்பா பார்த்தால் என்ன ஆட்டம் ஆடுவார்! என் பெயரை

வைத்துக்கொண்டது ஒரு குற்றம், நாடகம் எழுதினது இரண்டாம்குற்றம், அதில் அவள் நடித்தது எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்ததுபோலான குற்றம், அவள் காலேஜில் படிப்பது மன்னிக்கமுடியாத குற்றம். ஆக நான்கு குற்றங்களுக்கும் இப்போது நந்தினி ஆளாகிவிடுவாள் என்பதில் ஐயம் இல்லை. அடாடா! தன்னுடைய அனுபவத்தையே! தன்னுடைய— உணர்ச்சிகளையே கொட்டி எழுதியும் நடித்தும் சிறிது தணித்துக்கொண்டாளா! இந்தப் பத்திரிகையில் உள்ள இந்த விஷயத்தை அப்பாவின் சிநேகிதர்களும் பந்துக்களும் படித்தால் என்ன மதிப்பார்கள். அப்பாவின் அசட்டுக்குணம் எத்தனை தூரம் பாதிக்கப்பட்டு ஏச்சுக்கும் பேச்சுக்கும் இடமாகிவிடும். அதனால் அவர் மனது இன்னும் எப்படித்தான் கோபமடையுமோ! தெரியவில்லையே? இதனால் என்ன அனர்த்தம் விளையுமோ! என்று வைத்தியநாதன் மனது தவிக்கிறான்.

நந்தினிக்கே கடிதமெழுதி அந்தக் கதையை எனக்கு அனுப்பும்படி கேட்டால், அனுப்புவாளா? ஊம். ஒருபோதும் அனுப்பமாட்டாள் அவளைக்கேட்பதால் என்னுடைய முட்டாள்தனந்தான் வெளியாகும். இதைவிட காலேஜ் ப்ரின்ஸ்பால் ஸ்ரீமதி சகுந்தலாவுக்குக் கடிதமெழுதினால் ஒருவேளை கிடைக்கலாமல்லவா! ஆம்! இப்படித்தான் செய்யவேண்டும். என்று தீர்மானித்து உடனே கடிதம் எழுதத் தொடங்கினான்.

மரியாதைமிக்க ப்ரின்ஸ்பால் அவர்களுக்கு

நான் ஒரு காலேஜ் மாணவன். இன்று நேயன் என்கிற பத்ரிகையில் உங்கள் காலேஜ் வருஷ விழாவின் கொண்டாட்ட வைபவமும் புகைப்படமும் பார்த்தேன். வரதக்ஷிணை என்கிற பேயை விரட்டி யடிக்கக் கங்கணங் கட்டிக் கொண்டுள்ள கோஷ்டியைச் சேர்ந்தவன் நான். தங்கள் காலேஜில் நடைபெற்ற நாடகத்தைப்பற்றி நேசனில் படித்தபோது நாங்களும் அதே நாடகத்தைப் போட்டு ஒருகிளர்ச்சியும் புரட்சியும் உண்டாக்கி வரதக்ஷிணை வாங்கும் பிள்ளைவீட்டுக்காரர்களாகிய கொள்ளைக்காரர்களை ஒரு ஆட்டு ஆட்டி வைக்க மிகவும்ஆசைப்படுகிறோம். இத்தகைய உபயோகமான கதையை எழுதியும் நடித்தும் புகழ்பெற்ற உங்கள் சிறந்த மாணிக்கம் போன்ற மாணவியாகிய ஸ்ரீமதி நந்தினிவைத்யநாதன் அவர்களுக்கு எங்கள் சந்தோஷத்தையும் பாராட்டுதலையும் தெரிவிக்கவும். அந்தக்கதை அச்சுஏறாத கையெழுத்து ப்ரதியாயிருப்பினும் தேவலை, அதை தயவு செய்து அனுப்பினால் பார்த்து ஒரு காப்பி நாங்கள் எடுத்துக்கொண்டு உடனே திருப்பி அனுப்பிவிடுகிறோம். உங்கள் மாணவியிடம் இதற்கு அனுமதியும் வாங்கியனுப்பவும். ஏதாவது நிபந்தனைகளோ, கட்டணம் செலுத்த வேண்டியதோ இருந்தால் அதையும் தெரிவிக்கவும். தாராளமாக அப்படியே நடந்துக்கொள்வோம்,

இந்த உதவியைத் தாங்கள் செய்தால் என்றுமே மறக்கமாட்டோம். பாரதமாதா கல்லூரிக்கு மகாத்மாஜி கல்லூரி உதவுவது மிகமிகப் பொருத்தமானதாகும்.

உடனே அனுப்பவும்.

இங்ஙனம்
வைதீச்வரன்.

என்று கடிதமெழுதி உடனே உரையிலிட்டு அனுப்பினன். இம்மாதிரி செய்வது சரியா! இதனுல் அப்பாவுக்குக் கோபம் அதிகமாகி என்ன நேருமோ என்ற பயமும் ஊடே சற்று வதைத்தது எனினும் தனது மனத்தில் பொங்கும் ஆத்திரம் தணிவதற்கு இது ஓர் வழியாகவே தோன்றியது. அவைகளை அனுப்பிய பிறகே மனத்தில் ஒரு நிம்மதி நிலவியது.

மறுபடியும் இன்னொரு பத்திரிகை விலை கொடுத்து வாங்கினன். அதில் நந்தினியின் உருவம் சிறிது வேஷத்தினுல் மாறி இருப்பினும் மல்கோவா மாம்பழம் போன்ற கன்னங்களின் எடுப்பும் சண்பகப்புஷ்பம்போன்ற நீர்மையான மூக்கின் அழகும் கயல்விழிகளின் ப்ரகாசமும் சடக்கென்று தெரிந்து விட்டது. கல்யாணத்தன்று எடுத்த புகைப்படத்தையும் இந்த படத்திலிருக்கும் நந்தினியையும் ஒப்பிட்டுப் பார்த்தான். உடல் மெலிவின் வித்யாஸமும் முகத்தில் ஒரு விதமானசோகமும், ஏக்கம், கவலை, முதலிய ரேகைகள் படர்ந்திருப்பதும் வெகு நன்ருகத் தெரிந்தது. தண்ணீரில் வாழவேண்டியமீனைத் தரையில்போட்டதுபோலிருக்கும் பரிதாபத்தைக் காண உண்மையில் தன் பிதாவின்மீது வந்த கோபமும் அடங்காத வெறுப்பும் அவனைக் கட்டு மீறி நடக்கும்படிச் செய்துவிடும் போன்ற பயமும் உண்டாகியது. பத்திரிகையைப் புரட்டிக் கொண்டே வந்தான். பத்திரிகைக்காரர்கள் எழுதும் செய்திச் சுருள்பத்தியில் அந்தநாடகத்தின் விமர்சனம்வந்திருப்பதைக் கண்டு பரமசந்தோஷத்துடன் அதைப்படிக்கலானுன்.

"மகாத்மாஜி காலேஜின் வருஷாந்திரவிழா மேன்மை தங்கிய கவர்னரவர்களின் தலைமையில் நடைபெற்றது...இக் காலேஜ் ஆரம்பித்து சுமார் பத்து வருஷங்களாகிறது. பத்து வருஷத்திற்குள்ளாகஇக்காலேஜ் மிகமிக உயர்ந்த நிலைமையில் வ்ருத்தியாகிவருகிறது குறிப்பிடத்தக்கது. கல்லூரி போதனு முறையைத் தவிர கைத்தொழில் வளர்ச்சி சமூகசீர்திருத்த ஸேவை, மாணவிகள் ஒன்றுகூடி சன்மார்க்கத்தில் ஐக்ய பாவத்துடன் பலதுறைகளிலும் முன்னேற்றமடையவும் தொண்டு புரிவதற்காகவும் மகாத்மாஜி ஸேவாசங்கம் என்ற ஒரு சங்கத்தை ஸ்தாபித்து அதைமிகமிகச் சிறந்த முறையில் நடத்திவருகிருர்கள். இவ்வருஷ விழாவன்று பொதுமக்கள் உள்ளங்களை உருக்கும் வண்ணம்"வரதக்ஷிணைப்பேய்" என்கிற நாடகத்தை நடத்தினுர்கள். கதையை எழுதிய மாணவி

ஸ்ரீமதி நந்தினி—வைத்யநாதன் அவர்களே கதாநாயகியாக நடித்து ஒருபெரும்புரட்சியை விளைவித்துவிட்டார்கள். முக்ய மாய் கதையில் சிலபாகங்களைக்குறிப்பிடாமலிருக்கமுடியாது.

கதாநாயகியாகிய இந்திரா என்பவள் வரதக்ஷிணையும் சீரும் சிறப்பும் போதவில்லை என்கிற காரணத்தினால் தள்ளப் படுகிறாள். அவள் தானாகப் புக்ககம் சென்று மாமியார் மாமனார்காலில் விழுந்து தன்னை வேலைக்காரியாகவாவது ஏற் றுக் கொள்ளுங்கள் என்று கெஞ்சும் காட்சி மனத்தை உருக் கியது. கணவனிடம் வந்து இவ்வடிமையைக் கைவிடலாமா? அக்கினி சாக்ஷியாகக்கைப்பற்றிய ப்ரமாணத்தை மீறலாமா? என்பிதாவின் நிலைமைக்கு மனமிரங்கி என்னை ஒருவேலைக்காரி போல் நடத்தக்கூடாதா! பதியின் கடமை சதியைத்தவிக்க விடுவதுதானா? பணத்திற்கா நீங்கள் மாலை இட்டீர்கள்? மாலை யிட்ட பெண்ணுக்கு தயை காட்ட உங்கள் இதயத்தில் பசை யில்லையா? நான் இப்படித்தவிப்பதுதான் உங்கள் விருப்பமா; சமூகத்தின் பெருமை இதுதானா! இந்து தர்மத்தின் மகிமை இதுதானா! நாட்டின் லக்ஷயங்கள் இதுதானா' நான் தற்கொலை புரிந்து கொண்டால் அந்த பாதகம் உங்கள் காலைச்சுற்றாதா! ஒரு பெண்ணை அக்கினிசாக்ஷியாகக் கைப்பிடித்ததன் அடை யாளம் அவளை அக்கினிபகவானுக்கு இரையாகச்செய்வது தான் வீரபுருஷர்களின் தீரச்செயலா! உங்கள் காதில் என் கதறல் கேட்கவில்லையா! இம்மாதிரி வரதக்ஷிணைப்பேயின் நிர்மூலத்தாண்டவத்தின் பரிபவத்தில் மனது கொதித்து உடைந்து சின்னபின்னமாய்ச் சிதறிப் போவதன் விளைவால் அப்பெண்ணின் வாழ்வே பாழ்படுகிறது. சில இடங்களில் தகாத துன்மார்க்க வழிகளிலும் சென்று பாவியாகிறாள். இத் தகைய கதிக்குக்கொண்டுவந்தகணவனை—கொள்ளைக்கூட்டத் திற்கொப்பான பிள்ளைவீட்டுக்காரர்களை சமூகம் ஒன்றுமே செய்வதில்லை.

இத்தகைய சதிகாரர்களின் செய்கையினால் மன முடைந்து நாசமாய்விடும் பெண்களைப் பாழும் சமூகம் ஏற் பதில்லை. ப்ரஷ்டம் செய்து வேடிக்கைப் பார்க்கிறது. பின்னும் ஏசிப்பேசி இளப்பமாக்கி மடியச்செய்கிறது. சண்டாளசமூ கத்தின் ஊழலை வளர்க்கும் புல்லுருவிகளைக் கண்டிக்க எந்தச் சட்டமும் இல்லை. நீதியும் இல்லை. பெரியமனிதர்கள் என்று பட்டம், பதவி, பணம் இவைகளுக்காகவே உயிர் வாழும் பொம்மைகளும் வருவதில்லை. இந்த அனியாயத்தைக் கேட் பாரில்லையா! இந்த அக்ரமத்தை அடக்குவாரில்லையா! கடவு ளுமா கண்மூடிக்கொண்டு மவுனம் சாதிக்கிறது...

என்று இன்னும் ஏதேதோ வார்த்தைகளை ஆத்திரம் மீறியஉணர்ச்சியுடன்சுடச்சுடசொல்லிநடித்த நந்தினிவைத்ய நாதனுக்கு முன்பு ஒரு தொழிலாளியான நாடகக்காரர்களும்

வெட்கித் தலை குனியவேணும். கடைசியில் கந்தினி, "கொடிய வரதக்ஷிணைப்பேயே! எத்தனைக் குடும்பங்களில் நீ புகுந்து நாசத்தையும் க்ஷாமத்தையும் விளைவித்தும் இன்னும் உன் கொடிய பசி தணியவில்லையா! உன் ரௌத்திரத்தாண்டவத்தின் ஜதிஸ்வர அடைவுகள் முடியவில்லையா! இன்னும் சீற்றம் தணிந்து த்ருப்தி உண்டாகவில்லையா! இந்த உலகத்தில் இல்லாத பொல்லாத பெயர்களுடன் பில்லி சூன்யம் பேய் பிசாசு ஏவல் என்று உலாவும் கொடுமைகளை ஓட்டி த்வம்ஸம் செய்ய பல மந்திரவாதிகள் மூலை முடுக்குகளில் தோன்றி அவர்களே பெரிய ஆட்டம் ஆடவும், ஆட்டிவைக்கவும் சில பாவிகள் வேஷக்கார மந்திரவாதிகள் எத்தனையோ குடும்பங்களை இந்த வ்யாஜத்தின் மூலம் கெடுத்துக்குட்டிச்சுவராடிக்கவும், படிப்பே இல்லாத பட்டிக்காட்டு மூடஜனங்களை—ஏன் படித்த பட்டிண வாஸத்து ப்ரமுகர்களையும் கூட ஆட்டிவைக்கக்கிளம்பியிருக்கிறார்களே! உன்னைத் துலைத்துத்தலைமுழுகவும், உனக்குச் சாவுமணி யடித்துக் குழிதோண்டிப் புதைக்கவும்—உன்னை பூண்டோடு கிள்ளி எறியவும் ஒரு மந்திரவாதியும் இல்லையா? உன்னுடைய கொடிய அரசாட்சி இருக்கும் வரையில் உலகம் உருப்படப்போவதில்லை. ஹதமாகிப்பொடிசூர்ணமாகி சூன்யமாகி வரண்ட பாலைவனமாகி மடியத்தான் போகிறது.

ஹே! வரதக்ஷிணைப்பேயே! கருப்புமார்கெட்டில் கொள்ளையடித்தவனும் லஞ்சம் வாங்கி பெரிய பணக்காரனாகியவனும் தாகுவ்யாபாரம் செய்பவனும் சூதாடி குதிரைப்பந்தயமாடி மோசடியில் ஜெயித்துப் பணம்சேர்த்த பாதகர்களும் செய்யும் அட்டகாஸத்தைக்கண்டு, க்ராமாந்திரங்களில் உழுது பயிரிட்டு ஊணும் உடையும் வாழ்வுக்கான சகல சம்ரக்ஷிணையும் செய்து கொள்ள ஆகாயத்தை எதிர்பார்த்துஏங்கும் ஏழைக் குடிமக்களையுமா நீ பிடித்து ஆட்டுகிறாய்.

மாதம் 50 ரூபாய் சம்பளத்தில் 5—6—ஆத்மாக்களை வைத்து ரக்ஷிக்கும் வகையின்றி, தற்காலம் புதிய கொள்ளையாகிய வீட்டுக்குஅட்வான்ஸ் பணத்தைக்கொட்டித் துலைக்கக் கதியின்றி, அன்றாடம் காலக்ஷேபம் எப்படி ஆகப்போகிறது என்று கதிகலங்கித் தவிக்கும் குடும்பத்திலும் நீபுகுந்துநாசம் செய்கிறாய்! உன்னை ஒழித்துத் தலைக்கட்ட உலகில் யாருமே இல்லையா...என்போன்ற பாவிகள் கணவனால் விலக்கப்பட்ட அவமானத்துடன் தாய் வீட்டிலும் சிறுமைப்பட்டுச்சாகும் நிலைமை: ஊரிலும் மதிப்பில்லை, வாழாவெட்டி! வாழாவெட்டி என்கிற ஏச்சு: சுற்றத்தவர்கள் இகழ்வது. படித்துப்பயன் பெறப் பணமில்லை. சிபார்சு செய்ய மனிதரில்லை, மனிதரிருந்தால் மனமில்லை, உதவி செய்ய உற்றாரில்லை, எப்படியோ படித்து வ்ருத்திக்குவந்தால் வேலை யில்லாத் திண்டாட்டம். போக்கிரிப்பாவிகளின் கண்வலைக்குத் தப்பமுடியாத பயங்கரம்

அப்பப்ப! ஒன்ரு இரண்டா! வெறிபிடித்தப் பேயே! என் போன்ற இளங்கைகளின் உயிரைப் பலி வாங்கிக்கொண்ட பிறகாவது உன்னை ஒழித்து விடும் நல்ல காலம் உலகத்திற்கு வருமா! அப்போதும் வாராதா! கட்டிய கணவனும் வரதக்ஷிணை வரதக்ஷிணை என்று இரவு பகல் கொள்ளிவாய்ப் பிசாசுபோல் பறக்கும் அற்பமதியுடையமாமனுர் மாமியார் முதலிய எல்லோரும் அந்தப் பெண் மடிந்த சுகத்தை, சந்தோஷத்தை, வாழ்க்கையில் இன்பத்தை அடைந்து வாழட்டும். இதோ! இதோ! நான் பலியாகிறேன். வரதக்ஷிணைப்பேயே! என்னை விழுங்கி ஏப்பமிடு, இந்தச் சந்தோஷத்தை என் கணவனிடமும் என் மாமனுரிடமும் கூறிக் கும்மாளமிடு" என்று ஒரே உணர்ச்சி வெள்ளத்துடன் ஆவேசம்வந்தவளைப்போலக்கூறிவிட்டுக்கத்தியால் குத்திக்கொண்டு கீழேவிழுந்த காக்ஷி சபையிலுள்ள அத்தனைபேர்களின் நெஞ்சை உருக்கிக் கண்ணீரைக் கக்க வைத்துவிட்டது"

என்றதைப் படிக்கும்போது, "ஹா... நந்தினி! நந்தினி." என்று தன்னையறியாதுவாய்விட்டுக்கத்திவிட்டான். அவனுல் பொறுக்கவேமுடியாத வேதனைசெய்துவதைக்கிறது. உண்மையிலேயேநந்தினிகுத்திக்கொண்டுஇறந்திருப்பாளோ... என்கிற எண்ணம் தோன்றிவதைக்கிறது. தகப்பனுர் மீது வரும் கோபம் உச்சநிலையை அடைந்து கண்களில் தீப்பொறிபறக்கிறது. இனி இம்மாதிரி பயந்து கொண்டு வாளாவிருப்பதில் பயனில்லை. எப்படியாவது ஊருக்குச் சென்று அப்பாவிடம் இவைகளைக் காட்டி, சண்டையிட்டு "மரியாதையாய் நீங்கள் அழைத்துவருகிறீர்களா! நான் போய் விடட்டுமா!" என்று பிடிவாதம் செய்து நந்தினியை அழைத்துவருவதே சரி. என்று திடமான ஸங்கல்பம் செய்துகொண்டான். அதே நினைவில் உள்ளத்தில் ஏதேதோ யோசனைகள் சுழன்றுப் போராடின.

4

திடமான ஸங்கல்பம் செய்து கொண்டான்; அதே நினைவில் உள்ளத்தில் ஏதேதோ யோசனைகள் சுழன்றுப் போராடின. பைத்தியக்காரன், வைத்தியநாதனைப்போல் உதவாக்கரை மனிதன் வேறுயாரும் இருக்கமாட்டார்கள். நானே இந்தப் பத்திரிகையை அவனுக்குக் கொண்டு காட்டி அவனுக்குப் புத்தி கற்பிக்கலாம் என்றுதான் நினைக்கிறேன் என்று ஸதாநந்தன் எண்ணிக்கொண்டிருக்கையில் அவன் மனைவி அங்குவந்து, "என்ன அபாரமானயோசனைசெய்கிறீர்" என்ருள்.

இதே நேயன் என்கிற பத்திரிகையை மனைவிக்குக் காட்டி, பயித்தியக்கார வைத்யநாதனைப்பாரு! அப்பாவின் அசட்டுப் பிடிவாதத்திற்கு இந்த அசடு அடங்கிக்கிடக்கிறது. பாவம்

அவன் மனைவி பஸ்டுக்ளாஸ் கதையொன்று எழுதி காலேஜில் தானே கவர்னரின் முன்பு நடித்துக்காட்டி எல்லோரையும் ப்ரமிக்க வைத்து விட்டாளாம்! கதையின் முடிவைப்போல் அவள்முடிவும் ஆய்விட்டால் என்ன செய்வது? இந்த முட்டா ளிடம் போய் எப்படியாவது தகப்பனுரைச் சரிப்படுத்திக் கொண்டு நந்தினியை அழைத்துக் கொள்ளும்படிச் சொல்லி விட்டு வரப்போகிறேன்! என்று கூறிவிட்டுத் தடதடவென்று கிளம்பினுன்.

வைத்தியநாதனிடம் வந்து,டேய்பழி!கதையைப்படித்து விட்டுத்தான் மூணும் பேஸ்து வைத்தமாதிரி உட்கார்ந்திருக் கிருயா! பேஷ்! இனிமேல் கூடவா உனக்கு மனத்துணிய வில்லே! கிளம்புடா!வேணுமானுல் நான் உன்னுடன் துணைக்கு வருகிறேன். உன் தகப்பனுரிடம் சக்கைபோடு போட்டுப் பேசி தடபுடல் பண்ணிவிடுகிறேன். அவரும் ஏதோ மரியாதைக் குக்கட்டுப்பட்டு நடந்தால் பார்ப்போம்: இல்லேயேல் வாடா! இரண்டுபேருமாய் தீபாவளிக்கே அங்கு போய்விடலாம். தோழிமாப்பிள்ளேயாய் நான் வருகிறேன். வேண்டுமானுல் என் மனைவி நீலாவையும் அழைத்து வருகிறேன். எழுந்து ஒரு முடிவுக்கு வாடா! நான் இனி உன்னே விடவேமாட்டேன். என்று வற்புறுத்திக் கூறினுன்.

பாவம்! வைத்தியநாதனுக்கு அழுகை அழுகையாய் வரு கிறதேயன்றி என்ன பதில் சொல்வதென்றே தோன்றவில்லே. "ஸதாநந்தா! என்னுடைய மனது இப்போது ஒருநிலேகொள்ள வில்லே. ஏதோ பயித்தியம் பிடித்தது போலிருக்கிறது. என் னேத்தனிமையில் விட்டுவிடு. நாளே தினம் பேசலாம். தயவு செய்து போய்வா! நான் இப்படி சொல்கிறேனே என்று நினேக்காதே. எனக்குப்பேசவே பிடிக்கவில்லே" என்று தழ தழத்தகுரலில் கூறினுன்.

ஸதாநந்:—போடா! அசடே! நீ வெறும் கட்டுப்பெட்டி பயந்தாங்கொள்ளி. உங்கப்பாவுக்கு நீ செய்யவேண்டியமரியா தைகளேத் தவருது செய்யக்கடமைப்பட்டிருக்கிறது உயர்ந்த நோக்கந்தான்; இம்மாதிரி ஒரு பேராசைச் செய்கைக்கு நீ ஏண்டா கட்டுப்படவேணும்? முதலில் மனஸ்தாபந்தான் வரும்; பிறகு சரியாகிவிடுகிறது! இப்போது நேராக உன் மாமி யார் வீட்டிற்கே போகலாம்வா! நானும் வருகிறேன்... இல்லே என்ருல் இன்னெருகாரியம் செய்யலாம்: அதாவது உனக்கு ஏதோ விஷ ஜுரம் கண்டு படுத்திருக்கிறதாயும் உடனே வரவேணும் என்றும் உன் தகப்பனருக்கு ஒரு கடிபுடி தந்தி கொடுத்துவிடட்டுமா? நாளேயே கதறிக்கொண்டு ஓடி வந்து விடுவார், பிறகு நான் பேசிச் சரிப்படுத்திவிடுகிறேன் என்ருன்.

அப்பா! போதும் போதும் உன் யோசனை, எங்கப்பாவா இதற்கெல்லாம் மசிகிறவர்! அவர் முன்பே கதைகளில் வருவது போல் அப்படி இப்படி என்று பலபலவித உதாரணங்களைக் கூறி என்னை எச்சரித்திருக்கிறார். நீ தந்தியடித்தால் அதையவர் லக்ஷ்யமே செய்யமாட்டார், அதுமட்டுமா! இந்தப்பத்திரிகை விஷயம் எப்படியாவது தெரிந்துவிடும்: அதைக் கொண்டு விபரீத அனர்த்தத்தை உண்டாக்கி அமளி துமளி செய்துத் தாண்டவமாடுவார். முக்யமாய் என்தாயார் மிகவும் பலவீனப் பட்டவள்: நோயாளி என்றால் மிகையாகாது என்னைப்பற்றி நீ சொல்லியபடி தந்தியடித்ததைப் பார்த்தால் அது பெருந் தியாகி அவள் அதற்கு இரையாகிவிடுவாள்! எது எப்படியாவது ஆகட்டும்: என் தாயார் எனக்கு உயிருடன் இருந்தால்போதும். இன்றில்லை என்றாலும் நாளை இந்த விஷயத்தில் விமோசனத்தைக் காணலாம், என் அருமை அன்னையைக் காணமுடியுமா? ஏற்கெனவே என் தாயார் எனக்கு ஒரு கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறாள் தெரியுமா! தான் இறந்துவிட்டால் எனக்கு நல்லகாலம் பிறக்குமாம்: "எப்போதும் பங்காளிகளோ தாயாதிகளோ யாராயிருந்தாலும் சண்டை செய்து பிரிந்திருந்தால் ஒருசெட்டி நெருப்புடனாவது ஒருசெட்டிபருப்புடனாவது ஒன்று சேருவார்கள், என்று பழமொழி சொல்வார்கள்; அதுபோல் என்னுடைய மறைவுக்குப் பிறகாவது என்காரியத்திற்கு என் கண்மணி நந்தினி வந்து சேரட்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன்" என்று எழுதினாள், நான் பலமாகக்கண்டித்து அம் மாதிரி நீ ஏதாவது செய்தால் நான் உடனே இறந்துவிடுவேன். நந்தினி கதி அதோகதியாகிவிடும்! என்று பயமுறுத்திக் கடிதம் எழுதினேன். தெரிந்ததா? அம்மாதிரி நீ எதுவும் செய்து விடாதே; நீ இப்போது என்னைத் தனிமையில் விட்டுச் செல்லு. நான் நாளை சந்திக்கிறேன். அதற்குள் என் மனத்தையே நான் திடம் செய்துகொண்டு என்னசெய்யலாம் என்று தீர்மானிக்கிறேன்" என்று கண்டிப்பாகக் கூறினான். அதன் பிறகு ஸதாநந்தன் சென்றுவிட்டான்.

தனியே விடப்பட்ட வைத்யநாதன் ஏதேதோ எண்ணி பலமான யோசனைகள் செய்துக் குழம்புகிறான். இவனுடைய ரகஸியம் தெரிந்தவர்கள் ஏதோ துக்கம் விசாரிக்க வருவது போல் ஒருவர் மாற்றி ஒருவர் இதே விஷயத்தைக் கூறிக் கொண்டு வந்து பேசுவது இவனுக்கு ஒருபுறம் வெறுப்பாயும் எரிச்சலாயுமிருந்ததால் தான் வீட்டிலேயே இல்லாமல் எங்காவது சற்று போய் வரலாம் என்று எண்ணிக் கடல்கரையை நோக்கிச் சென்றுவிட்டான்.

இவனுடைய சினேகிதர்கள் அனேகர் தம்தம் மனைவிகளுடனும் மக்களுடனும்கடற்கரையில் தம்தம்போக்காக அமர்ந்து ஆநந்தமாய்ப் பேசியும் சிரித்தும் மகிழ்ந்தும் குதூகலமாக

விருப்பதைக்காண வைத்தியநாதனுக்கு துக்கம் துக்கமாய் வருகிறது. இருந்தாலும் இம்மாதிரி ஸந்தோஷமாயிருக்க வேண்டிய நிலைமையில் இதென்ன ஒண்டிக்கட்டை வாழ்வு. அதிலும் நந்தினியை அவதிப்படச் செய்துவிட்டு நான் இங்கு தவிக்கும் தவிப்பு ஒரு வாழ்வா! பாவம் நந்தினி என்ன நினைப்பாள்? அவள் கதையில் எழுதி இருப்பது போல் நானும் பாலைவன நெஞ்சுடைய வஞ்சகன் என்றுதானே எண்ணியிருப்பாள். நான் அப்படி இல்லை. அவளை சதா என்னிதய பீடத்தில் வைத்து இன்புற்றுக் கண்ணீர் வடிக்கிறேன் என்பதை அவளிடம் யார் தெரிவிப்பார்கள்? என் விதி இப்படியா ஆகவேணும்? என்னுடைய மனக்கோட்டைகள் இப்படியா தவிடுபொடியாகவேண்டும்? நான் யாருக்கென்று பயப்படுவது. ஓச்சீ! பணப்பேயின் பேராசைக்கு அடிமையாகிய என் பிதாவின் காலம் வரையில் எங்கள்வாழ்க்கையின் இன்பத்திற்கு முட்டுக்கட்டைதான்: அது என் விதி! என்று தனக்குள் குமுறுகிறான்.

நந்தினிக்கு ஒரு கடிதம் எழுதிவிடட்டுமா? என்று நினைக்கிறான். ஆனால் நந்தினி அதை மதிக்காமல் அவமதித்துவிட்டால் என்ன செய்வது? அல்லது அவள் தகப்பனாருக்கு என் பிதாவின்மீதுள்ள வஞ்சத்தினால் இக்கடிதத்தையே எங்கப்பாவுக்கு அனுப்பிவிட்டால் என்ன செய்வது? இன்னும் பெரிய அனர்த்தமாகவன்றோ ஆய்விடும். என்று குழம்பிக்கொண்டிருக்கையில் வைத்யநாதனின் உறவினர் ஒரு கிழவர் அந்தவூரிலிருப்பவர் கடற்கரையில் உலாவவருகையில் மெனக்கிட்டு வைத்தியநாதனிடம் வந்து உட்கார்ந்துகொண்டு, ''என்னடா செய்தி! உன்னைப்பார்ப்பதற்கு உன் விடுதிக்குப்போனேன். கதவு பூட்டியிருந்தது. சாயங்காலவேளை கடற்கரைக்குத்தான் வந்திருப்பாய் என்றுவந்தேன். ஏண்டா! வைத்தா? இன்று பத்திரிகையில் பார்த்தாயா? இதென்னடா வெட்கக் கேடு. உன் தகப்பனாரின் மரியாதை என்ன? அந்தஸ்து என்ன? அவரிடம் சொல்லியபடி வரதக்ஷிணை பாக்கியிருப்பதை மரியாதையாய்க் கொடுத்துப் பெண்ணைக் கொண்டுவிடாமல் இதென்னடாக் கூத்தும் கும்மாளமும்? பெண்ணை நாடகத்தில் நடிக்க வைத்து ஊர் சிரிக்கச்செய்து உங்கப்பாவின் மானத்தை வாங்கிவிட்டானடா உன் மாமனார்!. நீ பார்த்தாயா? அதைப் பார்த்ததும் எனக்கு ரத்தங் கொதித்துவிட்டது. என்னால் இந்த அலட்சியத்தைத் தாளாமல் ஓடிவந்தேன்.

என்று சொல்வதைக்கேட்டு வைத்யநாதனுக்குச் சற்றுக் கூட பிடிக்கவில்லை, கிழவன்மீது எரிச்சலாக இருக்கிறது. விஷயம் தெரிந்ததாகப் பேசினாலும் கிழம் விடப்போவதில்லை. எதிர்த்துப் பேசினாலும் விடமாட்டார். என்னசெய்து தலைப்

பது. எனக்கு எந்த விஷயமும் தெரியாதுபோலவே பேசி விரட்டிவிடுவதுதான் சரி என்று தனக்குள் முடிவுகட்டிக் கொண்டு, என்ன தாதா விஷயம்? நீங்கள்சொல்வது ஒன்றுமே புரியவில்லையே! நான் எந்தபேப்பரும் பார்க்கவில்லை. எனக்குப் புத்தகங்கள் படிக்கவே பொழுது போதவில்லை. பேப்பர் படிப்புக்கு எனக்கு நேரமேது தாதா! என்று ஒரு போடு போட்டான்.

கிழவர்:—இதென்ன பேச்சுடா வைத்தி! இன்று பத்திரிகையில் நான் பார்த்துக்கலங்குவதுபோல் நமது உற்றார் உறவினர்கள் எத்தனை பேர்கள் இதைப்பார்த்திருப்பார்கள். என்ன நினைப்பார்கள். உனக்குத்தான் இவைகளைப்பற்றி தெரியவேண்டாமா? உன் பிதாவுக்கு வரும் மான அவமானம் உனக்கில்லையா? நீ அவசியம் அந்தப் பத்திரிகையை வாங்கிப் படித்துப் பார்த்து சரியானபடி உன் மாமனார்மீதும் அந்தத் துஷ்டப் பெண் நந்தினியின்மீதும் நடவடிக்கை எடுத்துத் தானாக வேண்டும். வெட்கங்கெட்டுப்போய் நந்தினி வைத்ய நாதன் என்று கொட்டை கொட்டையாய்ப் பெயரைப் போட்டுக்கொண்டு கூத்தாடி இருக்கிறாளடா! வேஷத்துடன் புகைப் படம் வேறு வந்து அவமானம் தாங்காமல் தலைகுனியும்படிக்குச் செய்கிறது. வரதக்ஷிணை பூதமாம், பிசாசாம். அது மட்டுமா? அந்தக் கதையில் சில கட்டத்தை இந்தப் பெரிய மேதாவி எழுதிவிட்டதைப் பேப்பர்க்காரன் ப்ரமாதமாய்ச் சிலாகித்தும் கொண்டாடியும் ஒரு பக்கம் பூராவும் எழுதி இருக்கிறான், மடையன். இம்மாதிரி செய்தது தவறு என்று பத்திரிக்கைக்காரன் கண்டிக்க மூளை இல்லையா?... என்று ஏதேதோ அவர் சொல்லிக்கொண்டே போவதை வைத்ய நாதன் லக்ஷ்யமும் பண்ணவில்லை. காதில் வாங்கவும் இல்லை.

இதுவேறு கிழவருக்கு ஆத்திரம் வந்துவிட்டது. "ஏண்டா! வைத்தி! நானென்ன பயித்தியக்காரன் என்று நினைத்துவிட்டாயா? உனக்கு மான அவமானமில்லையா? நாலுபேர் நாக்கை வளைத்துப் பேசுவதைக் கேட்டால்எனக்கு நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாம் போலிருக்கிறதடா! இதோ பார் வைத்தி! உன்னையும் உன் பிதாவையும் அந்த தடிச் சிறுக்கியும் அவள் தகப்பனும் செய்துள்ள அவமரியாதை, இளப்பம், இதற்குச் சரியான ப்ராயச்சித்தம் செய்து தண்டித்தால்தான் கொழுப்பு அடங்கும்".

வைத்:—ப்ராயச்சித்தமா? அதென்ன தாதா? வாத்தியாரை யழைத்து ஓமம் வளர்த்தி...

கிழ:—போடா! மூட்டாளே! நான் சொல்வதெல்லாம் உனக்கு ஏளனமாயிருக்கிறதோ? வேணுமென்று இம்மாதிரி செய்தவர்களுக்கு நீ சொல்வதுபோல், வாத்தியாரை அழைத்து ஓமம் வளர்த்தி ஒரு பெண்ணை மறுவிவாகம் செய்து

கொண்டு கல்யாண தம்பதிகளின் புகைப்படத்தை இதே பத்ரி கையில் ஜம்மென்று வெளியிட்டுவிட்டால் அதைப் பார்த்த உடனே அந்த இருவரும் புழுகுபோல் துடிதுடி என்று துடிப் பார்கள். அதுதான் சரியான ப்ராயச்சித்தம், தெரிந்ததா?

இதைக் கேட்கக்கேட்க கிழவரின் மிகவும் குறுகிய மனோ பாவத்தையும் மூளைகெட்டதனத்தையும் கண்டு வெறுப்பும் பரிதாபமும்கொண்டு பெருமூச்சுவிட்டான். இத்தகைய பாவிகள் உலகத்திலிருப்பதனுல்தான் இந்தப்பாழும் வரதக்ஷி ணைப் பிசாசு சாச்வதமாக உட்கார்ந்து ஆளையே அழுத்திக் குடும்பத்தையே ஆட்டுகிறது. இருக்கட்டும். இந்த மனுஷ்ய னுடைய போக்கு இன்னும் எவ்வளவு தூரம் போகிறது, பார்க் கலாம்! என்று எண்ணியவனுய், தாதா! நீங்கள் மிகவும் தீர்க்கதரிசனமாய்ப் பேசுகிறீர்கள். ஒரு பெண் இருக்கை யில் பெண்மேல் பெண்ணுக யார் தாதா கொடுக்க மனம் துணிந்து முன்வருவார்கள். அந்தப் பெண்ணுக்கும் வர தக்ஷிணையினுல் இதேகதி ஏற்பட்டுவிடுமோ என்று பயப்பட மாட்டார்களா?...சட்டம் திட்டம் ஒன்றுமில்லையா?

என்று முடிப்பதற்குள், பலேபேஷ்! வைத்தி! அப்படி வழிக்கு வா! பெண்மேல் பெண்கொடுப்பது என்ருல் உன் விஷயத்தில் கசப்பா? புளிப்பா? நானு நீ என்று துள்ளிக் குதித்துப் போட்டியிட்டுக்கொண்டு வரமாட்டார்களா? நீ அவ்வளவு தூரம் போவானேன். என் பெண்ணே இருக் கிருள். என் பேத்தி இருக்கிருள். என் தங்கையின் பெண் இருக்கிருள்; சுமார் 20 வயதுக்குமேல்பட்ட எத்தனை பெண்கள் நமக்குள்ளேயே இருக்கிருர்கள் தெரியுமா? இரண்டாம் கல்யா ணத்திற்கு வரதக்ஷிணையாவது போரதக்ஷிணையாவது? அந்த கட்டம் முதல்கல்யாணத்துடன் முடிந்துபோயி இரண்டாங் கல்யாணத்திற்குப் பெண் கிடைத்தால் போதும் என்று வலை வீசுவார்கள்; சிலருக்கு உடனே அகப்பட்டுவிடும். சிலருக்கு அகப்படாத கொடுமையினுல் இவர்கள் பெண் வீட்டாருக்கு வரதக்ஷிணை கொடுத்துப் பெண்ணை வாங்குவார்கள் தெரியுமா? அந்த பயம் இனி இல்லையப்பா...என்ன சொல்லுகிருய்? நான் இன்றே உன் பிதாவிடம்போய்...

தாதா! தாதா! அடேடே! உங்கள் அவஸரத்தைப் பார்த்தால் கடற்கரையிலேயே உப்புஜலத்தை தாரைவார்த் துக் கல்யாணத்தைக்கூட முடித்துவிட்டுப் போய்விடுவீர்கள் போலிருக்கிறதே. பொறுங்கள் தாதா! கிணற்று நீரை வெள் ளமா கொண்டுபோய்விடும். நானே முதலில் உங்கள் வீட்டி லிருக்கும் சப்த கன்னிகைகளையும் பார்த்துவிட்டு யார்வேண் டுமோ என்னிஷ்டப்படி தேர்ந்தெடுத்து சுயம்வரம்போல் சொல்லிவிடுகிறேன். ஆனுல் ஒன்று. நீர் சொல்வதுபோல் வரதக்ஷிணை இல்லாமல் கல்யாணம் நான் செய்துகொள்வதாக

உத்தேசம் இல்லை. முதல் கல்யாணத்திற்கு 5 ஆயிரம் பேரம் பேசியதால் இரண்டாம் கல்யாணத்திற்குள் இன்னும் நான் சற்று படிப்பிலும், அந்தஸ்த்திலும் உயர்ந்து நன்றாக வளர்ந்தும் இருப்பதால் 7 ஆயிரம் கொடுத்தால் உடனே நாளையே கல்யாணத்தை முடித்துவிடலாம். தந்தியிலும் ஏரோப்ளேனிலுமாகச் செய்தியைப்பரப்பி மனிதர்களை வரவழைத்துவிடலாம். என்ன சொல்கிறீர்? எங்கே பணம்? எடும்...

என்றதைக் கேட்டு கிழவர் திடுக்கிட்டார். எனினும் சமாளித்துக்கொண்டு ஏண்டா ? என்னை அடிமுட்டாள், மடயன், உலக விவகாரம்தெரியாத அப்பாவி என்றெல்லாம் எண்ணிக்கொண்டு பேசுகிறாயா; இந்த மகாதேவனை அப்படி நினைத்துவிடாதேப்பா! முதல் மனைவி தவறிவிட்டு இரண்டாங் கல்யாணம் செய்பவனுக்கே வரதக்ஷிணை கிடையாதாம்; முதல் மனைவியைத் தள்ளிவைத்துச் செய்கிறவனுக்கு வரதக்ஷிணையாம்; அதிலும் 7 ஆயிரம் ரூபாயா! பேஷ்! பேஷ்! யாராவது கேட்டால் சிரிப்பார்கள்- குழந்தைத் தனமாகப் பேசாதேடா? விஷயம் பெரிது. தீர்க்காலோசனை செய்து சொல்லு. நாளைக்கு வருகிறேன். என்றார்.

அதேசமயம் மற்றொரு உறவினர் வந்தார். கிழவரும் இவனும் பேசுவதைப் பார்த்து ஒருமாதிரி நகைத்துக்கொண்டே ஓகோ! தாதாவா ! நான் நினைத்தேன்: வைத்தியிடம்தான் நீங்கள் போயிருப்பீர்களென்று எனக்குத் தெரியும். நான் நினைத்தது சரியாகிவிட்டது. என்ன தாதா ! பத்திரிகை விஷயமாகத்தானே......பெண்பார்த்து முடித்தாகிவிட்டதா ! அடேடே! நினைவில்லாமல் சொல்லிவிட்டேன். உம்முடைய சொந்தத்திலேயே ஊரப்பட்ட பெண்கள் இருப்பதால் கவலை இல்லை தாதா! என்னடா! வைத்தி! என்ன சமாசாரம்! தாதாவிடம் ஏதாவது வழி ஏற்பாடு செய்து கொண்டாயா! நானும் பத்ரிகை படித்துவிட்டுதான் வந்தேன்—என்று சொல்லியபடி அவனும் உட்கார்ந்தான்.

வைத்தியநாதனுக்கு, இதென்னடா தலைவேதனை இவன் வேறு வந்து சட்டமாக உட்கார்ந்து விட்டான்! என்றுவெறுப்பாகவே இருக்கிறது. எதையும் சொல்லவோ முடியவில்லையே என்று எண்ணியபடியே, ஓ! நீயும் பத்ரிகையைப் படித்துவிட்டுத்தான் வந்தாயா! சந்தோஷம்; தாதா சகல ஏற்பாடும் செய்துவிட்டார்;என்னையேநான் தாதாவிடம்விலைபேசினேன். அதாவது ஏழு ஆயிரம் ரூபாய்உண்டானால் இப்போதேதாதாவின் பெண்ணையே மணப்பதாகச் சொல்லிவிட்டேன். நீதான் சொல்லுப்பா ! முதல் கல்யாணத்திற்கு 5ஆயிரம் விலைபோன நான்இரண்டாங்கல்யாணத்திற்கு இன்னும்உயர்ந்த ஸ்திதிக்கு வந்துவிட்டதால் 7 ஆயிரம் ஏன் வாங்கக்கூடாது ! என்றான்

வந்தவன் பெரிதாகச் சிரித்தபடி, சபாஷ் சபாஷ்! வைத்தி! சரியான மதிப்பு! சரியான நியாயமான விலை! தாதா! நானும் கூடவிருந்து காரியத்தை முடித்துவிடுகிறேன். ஏற்பாடுசெய்து விடுங்கள்; தாதா! ஆனால் சட்டம் மட்டும் இந்தக் கல்யாணத்திற்கு இடம் கொடுக்குமோ கொடுக்காதோ...? என்றான்.

கிழவருக்குக் கோபம் அஸாத்யமாய் வந்துவிட்டது...... டேய்! நீங்கள் ஏதோ விளையாடுகிறீர்கள்! எனக்குக் கோபம் வந்துவிட்டால் பிறகு நீங்கள் வருந்திப்பயனில்லை. ஏதோகம்ம புத்துக்களாயிற்றே என்று நான் வலுவில் வந்தால் இப்படியா ஆட்டமாடுகிறீர்கள். ஒரு பெண் கிடைத்தால் போதும் என்று எங்களிடம் கெஞ்சிக் கேட்கும் காலம் வருண்டா வரும்! என்று சொல்லிக்கொண்டே எழுந்துபோய் விட்டார். அப்பாடா! ஒரு தலைவேதனை விட்டது: தொணதொணவென்று அறித்துக்கொட்டிவிடும். எங்கு எந்தப் பெண்மீதுபடாப்பழியைப் போட்டு தள்ளி வைக்கலாம்? எந்த பிள்ளைக்கு மறுமணமாகத் தன் குடும்பத்திலுள்ளசரக்கையேவரதக்ஷிணைதொல்லை இன்றித் தள்ளிவிடலாம்! என்று இதே எண்ணந்தான் இக்கிழவருக்கு: இவருடைய நான்கு பெண்ணையும் இப்படிப்பட்ட ஆளையே பார்த்து இரண்டாந்தாரமும் மூன்றாந்தாரமுமாகக் கொடுத்திருக்கிறார்; இன்னும் உள்ளவர்களுக்கும் வலை வீசுகிறார் பாவம்... டேய் வைத்தி! உங்கப்பாவின் முட்டாள்தனமும் உன்னுடைய பயந்தாங்கொள்ளித்தனமும் சுத்தமாய் நன்றாயில்லை. இன்று பேப்பரில் பார்த்ததும் மெத்த சந்தோஷமே உண்டாகியது. என்மனைவி கூட நந்தினியின் சாமர்த்தியத்தைப்புகழ்ந்து பாராட்டினாள். இனிமேலாவது உங்கப்பாவுக்கு புத்தி வருமா! என்றாள் என்மனைவி. அதுதான் இல்லை என்று தோன்றுகிறது. இன்னும் பகை அதிகமாகி நாளையே உனக்கோர் பாணம் போன்ற கடிதமே வந்தாலும் வரும் என்று நினைக்கிறேன். நீ இத்தனைநாள் இப்படி பயந்துபயந்து நடந்தது போதும். இனியும் அந்தப்பெண்ணைப்பாழடிக்காதே! நான் உன்னுடன் கூடவருகிறேன். நாம் இருவரும் நேரே உன் மாமனார் வீட்டிற்குப்போவோம்; விவகாரங்களை ஒரு விதமாக முடித்துக்கொண்டு வரலாம். இதை உன் பிதாவுக்கு நான் பக்குவமாகச் சொல்லி சரிப்படுத்துகிறேன். என்னடா மவுனம்? இந்த ட்ராமாவின்முடிவை நீ கவனித்தாயா? அந்தமுடிவுக்கு தானும்தயாராய்த்துணிந்திருப்பதையே அந்தக் கதைகாட்டுகிறது; இந்த ரகஸியத்தை உணராது எருமை மாடுபோலிருப்பது அழகா? என்று உண்மை அன்பும் ஆதரவுடனும்பேசினான். வைத்தியநாதனுக்கு என்னபதில் சொல்வதென்றேதெரியாமல் ஒரு விதபடபடப்பும் உள்ளுக்குள் பொங்கிவரும் துக்கமும் ஒன்று கூடி பதுமைபோலாக்கின.

5

என்னபதில் சொல்வதென்றே தெரியாமல் ஒருவித படபடப்பும் உள்ளுக்குள் பொங்கிவரும் துக்கமும் ஒன்று கூடி பதுமைபோலாக்கின. பதில் பேசாமல் நிற்கும் நந்தினியைக் கண்ட ப்ரின்ஸ்பால் சகுந்தலாதேவி மிகவும் அன்புடன் பேசத் தொடங்கி, நந்தினி! இதென்னம்மா மவுனம்; ஏன் கண்ணீர் விடுகிறாய்! நேற்றுகூட யாரோ ஒருவர் உன்னுடைய நாடகத்தைக் கேட்டபோது சந்தோஷமாக இசைந்தாயே! இப்போது ஏன் பதிலே சொல்லவில்லை? இந்தக் கடிதம் எழுதியிருப்பவர் உனக்குத் தெரியுமா! என்று அன்புடன் கேட்டாள்.

நந்தினி ஒரு திறமைவாய்ந்த ப்ரகாசமான புத்திசாலியான மாணவி என்பதுமட்டும் தெரியுமேயன்றி அவளுடைய வாழ்க்கைவரலாறு தெரிவதற்கு அவகாசமும் இல்லை; ப்ரமேயமும் இல்லை. ஆதலால்தான் வைத்யநாதனின் கடிதத்தையும் நந்தினியிடம் கொடுத்து பர்மிஷன்கொடுக்கிறாயா! என்று கேட்டாள். இந்த நாடகம் நடந்த பிறகு பல பள்ளிக்கூடங்களிலிருந்தும் காலேஜ்களிலிருந்தும் இந்த நாடகம் தங்களுக்கு வேணும் என்றும், நன்றாயிருந்ததைப்பாராட்டியும் பலபேர் கடிதம் எழுதியிருந்தார்கள். இதை நந்தினிக்குக் காட்டி சகுந்தலாதேவி மகிழ்வாள். அதேபோல்தான் வைத்யநாதனின் கடிதத்தையும் காட்டினாள்.

நந்தினிக்குக் கல்யாணமாகி சில மாதங்கள் வரையில் வைத்தியிடமிருந்து அன்புக்கடிதங்கள், ப்ரேமை நிறைந்த மலர்வாசகங்கள் ததும்பும் கடிதங்கள் வந்து கொண்டிருந்தன. நந்தினியும் அதற்குப்பதில் எழுதிவந்தாள். ஆகையால் வைத்தியநாதனின் கடிதத்தைப் பார்த்ததும் பழையநினைவுகள் அலைபோல் இதயத்தில் மோத, குபீரென்று கண்ணீர் வழிந்து தடைகட்டிய நாகம்போல் நிற்கச் செய்துவிட்டதன் மர்மம் சகுந்தலாதேவிக்கு எப்படித் தெரியும்?

தன்னைப்பற்றி பிரின்ஸ்பால் என்னநினைப்பாளோ? தான் ஹாஸ்டலில் இருப்பவளாதலால் தப்பபிப்ராயமாக நினைத்துவிட்டால் என்னசெய்வதுஎன்ற பயமும் நந்தினிக்குத் தோன்றியதால், "தாயே! இக்கடிதம் எழுதியவர் வேறுயாருமில்லை. என்னுடைய கணவர்தான்; பெயரை மறைத்துக்கொண்டு வைத்யநாதன் என்பதற்குப் பதில் வைதீச்வரன் என்று எழுதியிருக்கிறார். அந்த எழுத்தைப் பார்த்ததுமே எனக்குப் பழைய நினைவுகள் வந்துவிட்டது. அதனால்...

சகுந்தலா இடைமறித்து, என்ன! என்ன! இவர் உன் கணவரா! கணவர் எழுதியிருந்தால் அதற்குச் சந்தோஷப்படவேண்டுமேயன்றி துக்கப்படுவானேன்! உனக்கு விவாகமாகி இருப்பதுமட்டும் உன் பெயருடன் வைத்யநாதன் என்று

சேர்ந்திருப்பதால் தெரியுமேயன்றி மற்ற விஷயம் தெரியாது. நந்தினி! உன் கணவர் ஏன்......?

நந்:—தாயே! அதை மிகச் சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், இந்த வரதக்ஷிணை நாடகத்தின் முக்ய ஸாராம்சம் பூராவும் என் சுய சரிதைதான். அதையே நான் கற்பனையுடன் சேர்த்து எழுதி என்னாத்திரம் நீர நடித்தேன். இதற்கு பத்ரிகையில் இத்தனை ப்ரதானம்கொடுத்துப் போடுவார்கள். என்று நான் கனவில்கூட எதிர்பார்க்கவில்லை. ஏதோ காலேஜ் ஹாலுடன் இது மறைந்துவிடும் என்று எதிர்பார்த்தேன்...

சகுந்த:—நந்தினீ! வரதக்ஷிணைக் கொடுமைக்காகவா உன்னைத் தள்ளியிருக்கிறார்கள். உன் கணவனும் கூடவே உடந்தையா! அல்லது மாமனார் மாமியார் மட்டுந்தானோ?... அதான் உன்னுடையநடிப்புஉச்சஸ்தாயியில்நிர்த்தனம்செய்து காண்போர் உள்ளங்களைத் துளாவி உணர்ச்சிவயப்படுத்தி விட்டது...நந்தினீ; இதற்காகவா நீ அழுகிறாய், அசடே; இதுவும் உனக்கு ஒரு நல்லதற்குத்தான் என்று நினைத்துக்கொள்ளு. இதே நாடகத்தின் தகவல்பூராவும் உன் கணவன் பத்திரிகையில் படித்திருப்பது நன்றாகத் தெரிந்துவிட்டது. அதனால் இக்கதையைக் கேட்டிருக்கிறான். நீ இதற்கு உத்திரவு கொடுத்து விடு; நான் உன் கணவன்தான் அவன் என்பதையறியாதவள்போல் சுடச்சுட ஒருபொதுவானகடிதமும் எழுதி அனுப்பிவிடுகிறேன். அந்த நாடகத்தை அவன் காலேஜில் நடிக்கட்டும். அந்த விஷயம் உன் மாமனாருக்குத் தெரிந்து மனம் குழம்பி வெட்கித்தலை குனியட்டும்! பிறகாவது உனக்கு விமோசனம் உண்டாகுமல்லவா!...

நந்தி:—அம்மணீ! நீங்கள் சொல்கிறபடி நன்மைகள் எதுவும் உண்டாகாது. இந்தக்கதையை நான் எழுதியது குற்றம், நடித்தது பெருங் குற்றம், இதுபோல் பல குற்றங்களைக்கண்டு பிடித்துப் பின்னும் வேதனைக்கு இலக்காக்கி என்னை வருத்துவார்கள் என்றுதான் தோன்றுகிறது. ஏனென்றால், தன் பெயரை மாற்றி வைத்துக்கொண்டு ஏன் இவர் கடிதமெழுத வேண்டும்? அதனால்உள்ளுக்குள் ஏதோவிஷயத்தை மறைத்து எழுதியிருக்கிறார். அவருக்கு நாடகத்தை அனுப்பாமலேயே இருந்துவிட்டால் என்ன என்று கூட நினைக்கிறேன்...

சகு:—சேச்சே! அது சரியில்லை நந்தினீ! நாம் இன்னும் எத்தனையோ பேர்களுக்கு அனுப்ப இசைந்திருப்பதுபோல் இவருக்கும் அனுப்புவதுதான் சரி; இதற்குமேல் என்ன நடக்கிறதோ பார்க்கலாமே! ஏன் உனக்கு இஷ்டமில்லையா?

நந்தி:—தாயே! என்னை இரும்புள்ளத்துடன் விலக்கி வேடிக்கைப்பார்க்கும் அவருக்கு நான் ஆகாது என்றபோது என்னுடைய நாடகம் மட்டும் ஆகுமா! அதைத்தான் நான் நினைக்கிறேன். எனக்குக் கடிதத்தின் விஷயம் சந்தேகமாகவே

இருக்கிறது. என்னை என்ன தொல்லைகள் ஆட்டி வைத்தாலும் வைக்கட்டும். என் பெற்றோர்களுடைய உள்ளமும் உடலும் சல்லடைக்கண்ணாகத் துளைத்து ரணமாகிக் கிடக்கிற பரிதாபம் போதும்! இதைக்கொண்டு அவர்களையொன்றும்செய்யாதிருந் தால்போதும்: அதுதான் எனக்குக் கவலையாயிருக்கிறது.

சகு:—உன்னைப்பற்றி ஒரு சிறிது விஷயம் தெரிந்த பிறகு மேலும் அறிய ஆவலாக இருக்கிறது. உன்னுடன்பிறந்தவர்கள் எத்தனைபேர்கள்? உன் பிதாவுக்கு என்ன உத்யோகம்......

நந்தி:—அம்மணீ! 5 பெண்பிறந்தால் அரசனும் ஆண்டியாவான்! என்பது பழமொழி. அரசனே ஆண்டியாகும்படியான நிலைமை வந்துவிடுமெனின், சாதாரண மனிதனுக்குப் பிறந்துவிட்டால் என்ன செய்வது சொல்லுங்கள். என் சகோதரிகளுக்குக் கல்யாணத்தைச் செய்ததில் முக்கால்ஏழையான என்பிதா நான்குபிள்ளைகளைப்படிக்கவைத்ததிலும் என் விவாகத்தைச் செய்ததிலும்முழு ஏழையாய்-என்கடன்காரராய், மதிப்பற்ற மனிதராய் ஆகிவிட்டார். சொல்பசெல்வமும் கரைந்தது- ஏதோ உத்யோகமும் சிறியதுதான். வருவாயிக்கு மிஞ்சிய பெரிய செலவு-...இதுவெல்லாம் போதாமல் அவருடன் கூடப் பிறந்த சகோதரிகளின் தொல்லை வேறு. உம்... இவைகளைச் சொல்லிக்கொண்டு போனால் முடிவேஇல்லை! என் புக்ககத்தினர் செய்த கலாட்டாவில் எப்படியாவது மூவாயிரம் ரூபாயைச்சேகரித்துக்கொடுத்து என்னை அனுப்பிவைப்பதற்காக என் பிதா தன் மதிப்பு மரியாதை, முதலியவைகளை விட்டுவிட்டு என் சகோதரிகளிடம் போய் மனம் கூசியபடி உதவி கோரினர்.

என்னே உலகம்! என் பிதாவே ஆதியில் நல்லமுறையில் இருக்கையில் செய்துபோட்ட நகைகளையாவதுகொடுத்துதவ வேண்டும்; ஒரு பெண்ணின் வாழ்வுமலர் வாடிஉதிர்ந்துபோகிறது; அதைப் பரிமளம் மிக்க மலராக்கவேண்டும்! என்று கேட்டாராம். அக்காவின் புருஷர்கள் மறுப்பது சகஜம். அக்காவே மறுத்துவிட்டதோடு, இந்த நிலைமையில் இந்த நகைகளை நீ எப்படியப்பா மீட்டுக்கொடுக்கமுடியும், இனி வயதான நிலைமையில் உங்களால் எப்படியப்பா சமாளிக்கஆகும். பேசாமலிருந்தால் கொஞ்சநாள் போனால் தானே வந்து கூப்பிடுவார்கள். நீங்கள் வீணாகக் கவலைப்படாதீர்கள்! என்றுசொல்லிவிட்டார்களாம். உடன் பிறந்த தங்கையின் வாழ்வைவிட அவர்களுடைய தங்க நகைகள் தான் ப்ரதானமாகத் தோன்றியது...

சகு:—அடாடா! இப்படியா சொன்னார்கள்! கேட்கக்கதை போலிருக்கிறதே! என்னுடைய மாமன் பெண்ணுக்குக் கல்யாணம் செய்ய கையில் பணமில்லாது தவிப்பதைக் கண்டு நான் ஆயிரம் ரூபாயைக்கொடுத்துக்கல்யாணம் செய்யும்படிக்குச் சொன்னேன்...

நந்:—தாயே! உலகத்தில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேருக்கு கடும்பாறையைப்போன்ற உள்ளந்தானிருக்கிறது; தயாளகுணம் எங்கோ ஒரு சிலரிடம்தான் காணப்படுகிறது; அந்த முறையில் தாங்கள் ஒருவர்...என் சகோதரியின் புருஷன், "அந்த மாப்பிள்ளைக்குப் புதிதாகக் கொடுப்பதற்காக இந்த மாப்பிள்ளைகளுக்குக் கொடுத்ததை வாங்கிக் கொண்டுபோகவந்தீர்களா! ஏதோ செய்ததுபோதும் என்று பயித்தியக்காரத்தனமாக நாங்கள் இருந்ததுபோல் யாரிருப்பார்கள்?" என்று தாங்கள் கூட சமயம் வந்தால் கேட்கலாம் என்கிற நிலைமையில் இருப்பவர்கள் என்பதை விளக்கிப் பேசி என் தந்தையின்மனத்தை அளிந்த புண்ணாக்கிவிட்டார்கள்: என்னுடைய க்ஷேமத்தைக் கோரி தன்னுடைய பந்துக்கள் ஒவ்வொருவரிடமும் போய்க் கேட்டுவிட்டார். இம்மாதிரி யாரிடமும் போகவேண்டாம் என்று நான் எத்தனையோ சொல்லியும் கேட்காமல் அவமானப்பட்டு மனங்குமுறிவிட்ட பிறகு தான் என் வேண்டுகோளின்படி இங்குக் கொண்டு சேர்த்தார்.

சகு:—ஐயோ பாவம்! எப்படியாவது உன்னை வாழவைக்கப்பாடுபட்டுப்பார்த்துவிட்டார்...போகட்டும். உனக்கும் ஒன்றும் முழுகிப்போகவில்லை. நீ படித்து முடித்ததும் நானே சிபார்சு செய்து நல்ல வேலைவாங்கித்தருகிறேன். நீ உன் பெற்றோரைக் காப்பாற்றலாம். இக்கடிதத்திற்கு என்ன பதில்எழுதுவது சொல்லு.

நந்:—அம்மணீ! என்னை மன்னிக்கவேண்டுகிறேன். நந்தினி கொடுக்கமறுக்கிறாள் என்றே எழுதிவிடுங்கள். உங்களுக்கே இன்னும்எப்படிதோன்றுகிறதோ அப்படிஎழுதுங்கள்

சகு:—நந்தினி! இந்த விஷயத்தில் நான் உன்னுடைய க்ஷேமத்தைக் கோரியும் உன் காலேஜ் ப்ரின்ஸ்பால் என்கிற முறையிலும் சொல்கிறேன்: இந்தசமயம் இதையனுப்புவதுதான் நல்லது என்று தோன்றுவதால் நான் உறுதியாகச் சொல்கிறேன். இதை அனுப்புவதுதான் உசிதம்; நீமறுக்காதே.

நந்:—தாயே! அப்படியானால் இரண்டு நாள் அவகாசம் கொடுங்கள்; இதை என் கை எழுத்தினாலேயே பூராவும் எழுதித்தருகிறேன். அனுப்பிவிடுங்கள். கடவுள் விட்டவழியாகட்டும், என்றாள். அதற்கு ஒப்புக்கொண்ட சகுந்தலா நந்தினியை தேற்றியும் தட்டிக் கொடுத்தும் சமாதானப்படுத்தினாள். அவளையறியாத ஒரு பெருமூச்சு வந்தது.

தேற்றியும் தட்டிக் கொடுத்தும் சமாதானப்படுத்தினாள். அவளை யறியாத ஒரு பெருமூச்சு வந்தது. இதைக் கண்ட சுப்ரமண்யம், நாகலக்ஷ்மீ! நீ என்னமோ என்னைத் தட்டிக் கொடுத்து தாஜாபண்ணுவதில் உபயோகமில்லை. அந்தப் பெண் இம்மாதிரி துடுக்காக நடந்துகொண்டது ஏதோ பெரிய விபரீதத்திற்குத்தான் வழியாகிவிட்டது என்று எனக்குத் தோன்றுகிறதேயன்றி நல்லதாக முடியும் என்று மனத்தில் படவேஇல்லை நான் இப்போதே அந்த ஊருக்குப்போய் ஹாஸ்டல் தலைவியையும் காலேஜ்ப்ரின்ஸ்பாலையும் கண்டு பேசி நந்தினியைக்கண்டித்துவிட்டுதான் வரப்போகிறேன். எனக்கு இன்னொரு சந்தேகங்கூடத் தோன்றுகிறது. அதாவது நந்தினிக்கு இத்தனை உணர்ச்சியுடனும் அழகான வசீகரமான பதங்களுடனும் கதை எழுதத்தெரியுமா என்ன! அல்லதுநடிக்கத்தெரியுமா! இரண்டும் அவளுக்கு எப்படி வந்தது என்று எனக்குப்பெரிய சந்தேகமாகவே இருக்கிறது. அதோடு உடம்பில் கொஞ்சமும் பயமே இல்லாமல் நந்தினீ' வைத்தியநாதன்' என்று நாகரீகமுறையில் பெயரைத் துணிச்சலாகப் போட்டுக் கொண்டு கவர்னர் முன்னிலையில்தான் கூத்தாடிபோல்நடித்து இப்படிச்செய்வதென்றால் அதுபிறருடைய போதனையும் சூழ்ச்சியுந்தானிருக்கவேண்டும்! உறத்த குரலில் பேசியறியாத பெண்ணுக்கு கண்களில் நீரைக்கக்கவைக்கும்படி சுடச்சுட எப்படி எழுதவும் பேசவும் தெரியும்! இம்மாதிரி செய்துவிட்டதால் பெத்தபிதாவாகிய என் மனமே கோபமடைகிறதென்றால் அவர்களும் இந்த அலங்கோலத்தைப் பாராதிருப்பார்களா? நாடகக்காரி எங்களுக்கு வேண்டாம் என்று சட்டமாகச் சொல்லிவிட்டால் என்றுமே விமோசனமில்லாத வாழாவெட்டி என்கிற போர்வைக்குள்ளல்லவா அவள் உலாவ நேரும். இதை யோசிக்கவேண்டாமா! என்று கத்துகிறார்.

இவைகளைக் கேட்டுக்கொண்டேவந்த மருமகள் சிரித்தபடி மாமா! உறத்துப் பேசத்தெரியாதவளுக்கு உணர்ச்சியுடன் பேசவருமா! எழுதவருமா? என்று கேட்கிறீர்கள். சில மாத காலமாய் நேசி என்கிற பத்திரிகையில் உத்திரா என்கிற பெயருடன் ஒருத்தி எழுதியிருந்த கதைகளை நீங்கள் வெகு ஸ்வாரஸ்யமாய்ப் படித்துப் புகழ்ந்து பேசிவருகிறீர்களே! அது யாருடைய கதை தெரியுமா! தெரிந்தால் நந்தினிக்குக் கிடைத்த பெயர்தான் எனக்கும் கிடைக்கும். இக்காலத்தில் புனைப்பெயர் தாண்டவம்தான் பெரிதாக இருக்கிறதே. அதைப்போல் நானும் எனது நக்ஷத்திரத்தின் பெயரை வைத்துக்கொண்டு தானே எழுதிவருகிறேன். ஏதோ பத்திராதிபர் கொடுக்கும் சன்மானத்தினால் நம் குடும்பத்தின்

சிலவுக்கு சற்று சகாயமாயிருக்கிறது. இதை நீங்கள் இனி யாவது நம்புகிறீர்களா...

என்று மருமகள்சொல்வதைக்கேட்டதும் சுப்ரமண்யமும் நாகலக்ஷ்மியும் ப்ரமித்துப்போனூர்கள். நாகலக்ஷ்மி மருமக ளைச்சேர்த்துக் கட்டியணைத்து முத்தமிட்டாள்...என்னுடைய சந்தோஷம் கரைபுரண்டுபோகிறது. உணர்ச்சியும், வேகமும் ததும்பும் கதைகளை எழுதிய உன்னைக்கூட அப்பா சந்தேகிப் பாரோ என்னவோ! உள்ளத்தில் பொங்கிவரும் அனுபவம், பார்க்கும் அனுபவம், கேட்டும்படித்தும் முதலிய எத்தனையோ விதத்தில் மனிதர்களின் மூளை விசாலத்தை அடைகிறது. எந்த வித்தையிலாகட்டும், பிறக்கும்போதே தேர்ச்சிபெற்று அனுபவத்துடன் பிறந்துவிடுகிறூர்களா! இதென்ன பேச்சு? நந்தினி நீர்பூத்த நெருப்புப்போன்று சகல உணர்ச்சிகளையும் தன்னிதயத்திலேயேவைத்து மூடி இருப்பவள். எப்படியும் தள்ளிவைத்தது வைத்தாகிவிட்டது; இனி சேர்த்துக்கொள் ளாவிட்டால் புதியமோசம் ஒன்றுமில்லை. தனது உணர்ச்சியை -தன்னிதயக்கொதிப்பை—அந்த முட்டாள்களும் ஊரும் நாடும் நன்கறியட்டும். இனியாவது வரதக்ஷிணைக் கொடுமை யின் பயங்கரத்தை யாராவது ஒருவரேனும் உணர்ந்துபயந்து அந்தப் பேயை ஓட்டித் தலைமுழுகட்டும் என்று அதீதமான போக்கில் மனதுடைந்துபோய்தான் துணிந்து எழுதியிருக் கிறுள். வைத்தியநாதன் என்கிற பெயரைவைத்துக்கொள் ளக்கூடாது என்று எந்தச் சட்டத்தினுலும் அவளைக் கட்டுப் படுத்த முடியாது. தாராளமாய் அக்கினி சாக்ஷியாய்ப்பலர் அறிய பெற்ற உரிமையைக் கையாள அவளுக்கென்ன பயம். ஏன் பின்னடையவேண்டும். அவள்செய்தது மிகவும்போற்றத் தக்கது என்று நான் பெருமைப்படுகிறேன். என்னுடைய பெண்ணும், நாட்டுப்பெண்ணும் சிறந்த எழுத்தாள திலகங்க ளாகி ப்ரகாசிக்கப்போவதைப்பற்றி நான் பரம சந்தோஷ மடைந்து பூரிக்கிறேன். உலகத்தில் செல்வ நிலைமைக்கு தரித்திரம் தாண்டவமாடுகிறதேயன்றி கற்பனை ஊற்றுச் சுரக்கும் அழியாத செல்வத்திற்கும் அனுபவ செல்வத்திற்கும் பஞ்சமில்லாது பகவான் வைத்து ரக்ஷிக்கட்டும்! என்று உத் ஸாகமேலீட்டால் சொல்லும்போது தபால்காரன் ஒரு கடி தத்தைக்கொடுத்தான். அது நாகலக்ஷ்மியின்பேருக்கு இருந்த தால் அவளே உடைத்துப் படிக்கவாரம்பித்தாள்.

அம்மாவுக்கு நந்தினி நமஸ்காரம். உபயகுசலம்.

நான் இக்கடிதம் எழுதுவதற்கு முன்பே விஷயமறிந்து என்னை அப்பா திட்டிக்கொண்டு இருக்கலாம்...ஒருக்கால் நீயும் அவருடன் சேர்ந்து திட்டினுலும் திட்டலாம்...முன்னறிதெய் வங்களின் திட்டுக்களை நான் ஆசீர்வாத மொழிகளாக எண்ணி மகிழ்கிறேன். என்னுள்ளத்தில் பொங்கிக் கொந்தளிக்கும்

உணர்ச்சியின் வேகம் ஆத்திரத்தின் அனல் ஏக்கத்தின் எதிரொலி எல்லாம் ஒன்று சேர்ந்து அந்த நாடகமாய் என்னையறியாத உத்ஸாகத்துடன் உருவாகி நடிப்புக் கலையிலும் ஒரு படிக்கட்டு உயர்த்திவிட்டது. என் மனமறிய இது குற்றமல்ல என்பது என் துணிபு. என்னைக் கைவிட்டுவிட்டபிறகு இனி எனக்கு அவர்களைப் பற்றிக்கவலையும் இல்லை, எதிர்பார்க்கவும் இல்லை. எனக்குப் பிழைக்க பகவான் வழி வகுத்துக்கொடுக்க இந்த நூதன முறையைக் கொடுத்திருப்பதாக நான் சந்தோஷப்படுகிறேன். இந்த சம்பவத்தின்மூலம் மற்றொரு புதிய நல்ல சமாசாரமும் சந்தோஷச்செய்தியும் உங்களுக்குத் தெரிவிப்பதற்காகவே இதை எழுதுகிறேன்.

அதாவது எனக்கு நந்தினிவைத்யநாதன் என்றபெயரைப் போட்டுக்கொள்ளும் உரிமையை அக்கினி சாக்ஷியாய் இரண்டாயிரம்ரூபாயும் சீரும்சிறப்பும் கொடுத்து கல்யாணமென்கிற கடையில் வாங்கினீர்களே! அதே மனிதர் என் கதையைத் தங்கள் காலேஜில் நடிக்கவேண்டும் என்று என்னுடைய ப்ரின்ஸிபாலுக்கு எழுதிக் கேட்டிருக்கிறார்: இது நன்மைக்கோ! தீமைக்கோதெரியாது; என்ப்ரின்ஸ்பால் கட்டாயம்கொடுக்கும் படிசொல்லியதால் ஒப்புக்கொண்டேன்; இனிமேல்தான் அனுப்பப்போகிறேன். இது முக்யமான விஷயமல்ல; எனினும் எழுதக்கடமைப்பட்டிருக்கிறேன்.

நிற்க, என்னுடைய அந்தக் கதையைப் பாராட்டிப் பல பேர்கள் என்னுடைய தலைவிக்குக் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள், அதைத் தவிர ஒரு சினிமாக்காரர் இதேகதையைப் படமாகப் பிடிக்கவேணுமாம்; 5 ஆயிரம்ரூபாய் எழுதியவருக்கும் 5ஆயிரம்ரூபாய் எங்கள் காலேஜ்-இலவசச்சம்பளநிதிக்கும் நன்கொடையாகவும் கொடுப்பதாக நேரில் வந்து என் ப்ரின்ஸ்பாலிடம் கேட்கிறார்கள். "இம்மாதிரி ஒரு அதிர்ஷ்டத்தை தானாக வலியவரும்போது நீ தடுக்காதே! ஒப்புக்கொள்ளு" என்று ப்ரின்ஸ்பால்சொல்கிறார். வற்புறுத்துகிறார். ஆகையால் நான் இது விஷயமாய் யோசனையே செய்யப்போவதில்லை. அப்பாவின் கஷ்டத்திற்கு இந்த மகத்தான உதவியைக் கொடுத்துள்ள பகவானை இதய பூர்வமாக வணங்கி ஒப்புக்கொண்டுவிட்டேன். இந்தப் பணத்தை நான் என் மாமனாரின் பேராசைக்குக் கொடுப்பதற்கு இசையப்போவதில்லை. இது விஷயத்தில் நீங்களும் வற்புறுத்தவேண்டாம். அந்தக் கதையின் மூலம்என்காலேஜுக்கும் என்முன்னறிதெய்வங்களுக்கும்உதவி கிடைத்ததே, அதுவே போதும்! நிலங்கள் சில வீணாகக் கடனில் மூழ்கிவிட்டதை நினைத்து நினைத்து நான் கண்ணீர் விடுவது கொஞ்சநஞ்சமல்ல. அதை மீட்டுக்கொண்டால் நமக்குச் சாப்பாட்டிற்குச்சற்றும் கஷ்டமின்றி தானியலக்ஷ்மி தாண்டவமாடுவாள். ஆகையால் அப்படியே செய்யும்படிக்கோருகிறேன்.

என் ப்ரின்ஸ்பால் அந்தப் பணத்தை அனுப்புவார்கள். எல்லோருக்கும் என் வந்தனங்கள் தெரிவிக்கவும்.

இங்ஙனம் நந்தினி

இதைப் படிக்கையில் நாகலக்ஷ்மியின் கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருகியது. கடிதத்தை உறக்கவே படித்ததால் சுப்ரமண்யம் கேட்டு வியப்புக் கடலாடி ஆனந்த பாஷ்பத்தைப் பெருக்கினுர் என்ருல் மிகையாகாது.

7

வியப்புக்கடலாடி ஆனந்த பாஷ்பத்தைப் பெருக்கினுர் என்ருல் மிகையாகாது.வைத்தியநாதன் குடியிருக்கும்வீட்டுக்காரராகிய வடிவேலு தன் மகனும் மருமகளும் புதிய இன்ப வாழ்க்கையில் இனிப்புடன் இறங்கி இருப்பதால் அவர்களின் ஆனந்தமே ஒரு தனித்த வசீகரம் பொருந்தியதாகக்கருதி இந்த ஆனந்தத்தைக் கண்ணுரக் கண்டு அனுபவிப்பதற்கே பேராவல்கொண்டு லீவும் வாங்கிக்கொண்டு வந்துவிட்டார்.

இந்த விஷயத்தை வைத்தியநாதன் தினம்தினம் பார்த்துப் பெருமூச்சுவிட்டுத் தனக்குள் ஏங்கித் தன் தலைவிதியை நொந்துகொள்வான். அன்றும் பீச்சிலிருந்து நேரே வீட்டிற்கு வந்தான். வீட்டுக்காரரின் மருமகள் ப்ரம்மானந்தமாக வீணைவாசித்துப் பாடுகிருள். அவர் மகன் கஞ்சீரா வாசிக்கிருன். வீட்டுக்காரர் இந்த கானம்ருதத்தை உண்டு களிவெறி கொண்டு சபாஷ் போடுவதோடு தன் மனைவியைப்பார்த்து பேரானந்தமடைகின்ற காட்சியை மாடியிலுள்ள தன் தனி விடுதியின் ஜன்னலால் பார்த்து ஏங்கி நின்ருன். ''நந்தினிக்கும் உயர்ந்தசங்கீதம் வரும். அப்பா இப்படித் தானும் அனுபவிக்காமல் என்னையும் அனுபவிக்கவிடாமல் வரதக்ஷிணை என்கிற வேலியைப் போட்டுவிட்டாரே, என்ன செய்வேன். ''சீச்சீ! அப்பாவாவது, அம்மாவாவது! இனிமேல் நான் தாமதிக்கப் போவதே இல்லை. வெகுவெகு ஆழமாக யோசனைசெய்து ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். எங்கள் பந்துவான ராமுவையும் சினேகிதனையும் கூட அழைத்துச்சென்று நந்தினியை அழைத்துக்கொண்டு வருவதே சரி! நாளைக்காலையில் அவர்களைச் சந்தித்து உடனே இருக்கும் ரயிலுக்குப் புறப்பட்டுவிடுவதே சரி! இந்தத் துணிச்சலான தீர்மானத்தை உடனே அப்பாவுக்கு எழுதிப்போட்டு மறுகாரியம் செய்கிறேன். என்னுடைய இன்ப வாழ்க்கையில் குறுக்கிட்டு நாசம்செய்வதை இனி நான் சகிக்கப்போவதில்லை. நாளையே நந்தினிக்கு வேண்டிய சில ஆடையாபரணங்களை வாங்கிக்கொண்டுபோய் வருவதேசரி!'' என்று முடிவுகட்டிவிட்டான்.

அந்தக் கொடிய இரவு பொழுது நீண்டமலேபோல் வளரு வதாகவே அவனுக்குத் தோன்றியது. தகப்பனருக்குத் தன் மனத்தில் தோன்றியபடியே கடிதத்தை எழுதி உரையிலிட்டு தயாராக வைத்தான். எப்போது பொழுதுவிடியும், காலேய தினம் நந்தினியைக் கண்டுகளிக்கும் நேரம் எப்போது வரும் என்று ஏங்கியபடியே படுக்கையில் புரளுகிருன். தூக்கமே வரவில்லே. மூன்றுமணிக்குமேல் அவனேயறியாமல் சற்றுஅயர் ந்து தூங்கி விட்டான்.

எப்போதுமே வைத்தியநாதன் காலேயில் சற்று தாமத மாகத்தான் எழுந்திருப்பான். இரவு வெகு நேரம் படிப்பத ஞல் இந்த வழக்கம் சிறியவயதுமுதல் உண்டாகியிருப்பது சகஜமாகிவிட்டது. ஆனுல்அந்த விதிக்குவிலக்காக 5-30 மணிக்கே எழுந்துவிட்டான்; உள்ளத்தில்இரண்டுவிதஉணர்ச்சிகள் போராடுகின்றன. தகப்பனுரை விரோதித்துக்கொண்டு நீ இப்படிகிளம்பலாமா! என்று ஒன்று கூறுகிறது. தகப்ப ஞர் செய்வது மகத்தான குற்றம். அக்குற்றத்திற்கு உடந்தையாய் இது பரியந்தம் இருந்ததுபோதும்; முட்டாள் தனமாக இனியும் நடக்காதே: இளந்தளிர் போன்ற நந்தினியின் உள் ளம்அளிந்த புண்ணுகி விட்டதை இத்தனே நாள் உணரவில்லே என்றுலும் அவளுடைய நாடகத்தின் முடிவைக்கண்ட பிறகாவது உணர்ந்து அவளே அக்னி சாக்ஷியாகக் காப்பாற்றுவதாகக் கூறிய ப்ரமாணத்தை நிறைவேற்று. இல்லாவிடில் அவள் உயிர்போய்விடும்; அந்தக் கொலேபாதகம் உன்னேப் பிறட்டியடிக்கும். ஜாக்ரதை, முன்வைத்த காலேப் பின் வைக்காதே. என்று எச்சரிக்கின்றது இன்னெருபுறம்....சற்று குழம்பிய பின் இரண்டாவது தீர்மானமே வெற்றிபெற்றது.

அவ்வளவுதான்: மனத்தில் எங்குமில்லாத ஒரு சந்தோஷப்புயலடித்து மயக்கியது. நந்தினி! நந்தினி! இன்னும் சில மணி நேரத்தில் உன்னிடம் நான் மன்னிப்புக்கோருவேன். என்னே நீ கட்டாயம் மன்னித்து விடுவாய்...என்று தனக்குள் எண்ணியவாறு கதவைத்திறந்தான். என்ன ஆச்சரியம். சாந்தமே உருக்கொண்டு சந்திரவதனத்தில் புன்னகைபூத்துக் குலுங்க, கண்களில் ப்ரேமையின் ஜ்வாலே வீச நந்தினி கையில் ஒரு தட்டில் தாம்பூலம் முதலிய மங்களகரமான வஸ் துக்களே எடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்து அவைகளே வைத்திய நாதனின் காலடியிலேயே வைத்துவிட்டு, இரு பாதங்களேயும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு ஆநந்தக் கண்ணீரால் பாதங்களே நீராட்டிப் பின் எழுந்து கரங் குவித்து ச்ருங்காரப்பதுமையோ! ஸௌந்தர்ய தேவதையோ! என்று ஐயுரும்படி நின்றுள்'

தன் கண்களேயே தன்னுல் நம்பமுடியவில்லே. ப்ரமிப்பும் திகைப்பும் ஆநந்தமும் ஒருங்கே அடைந்து...என்ன! இது...

நான் தூங்கி எழுந்துவிட்டேனே......கனவு காண்பதாக...... கனவா...என்று தடுமாறுவதைக்கண்ட அவன் பிதா பரமேச்வரன் பின்னேயே உள்ளே வந்து, செல்வா! கனவு கண்ட நாட்கள் கடலில் கரைந்தது. உங்களுடைய இன்பவாழ்க்கைக்கு நான் போட்டிருந்த முள்வேலி எரிந்துசாம்பலாகி விட்டது; நீ காண்பது உன்கண்ணான கண்மணி நந்தினி வைத்யநாதன் தான். சிறந்த எழுத்தாளர்களின் ஜாபிதாவில் இடம்பெறக் கூடிய தைரியலக்ஷ்மி தான். கற்பனாலங்கார உலகில் சஞ்சரித்துப் பிறரைமகிழ்விக்கும் சிறந்தமேதைதான்: என்போன்ற மூடர்களைத் திருத்தி நல்வழிப்படச்செய்யும் நாரீமணிதான்; வைத்தீ! நான் புனர்ஜன்மம் எடுத்து விட்டேன். முதலில் நீ நந்தினியை ஏற்றுக் கொள்ளு! என்று சொல்வதை அவனால் நம்பவே முடியவில்லை. சற்று ப்ரமித்து நின்றபின்...அப்பா! இந்தக் காக்ஷிகள் கனவல்லவா! உண்மையானதா!......அப்படியானால் என்னை நீங்கள் இவளுடைய பிதாவுக்கு விற்றவிலையில் இன்னும் மூவாயிரம் ரூபாய் பாக்கிவரவேணுமே. வந்து விட்டதா! தாயார் எங்கே...

என்று வெடுக்கென கேட்டபோது நந்தினி களுக்கென சிரித்து விட்டாள். அவன் தாயார் உண்மையான பேரானந்தத்துடன் உள்ளே வந்து, அம்பீ! அம்மா எங்கே என்று நீ கேட்ட பிறகுதான் நான் வரவேணும் என்று வெளிப்புறத்திலேயே நின்றேன்; இத்தகைய பேரானந்தத்தைக் காணத் தான் என்னுள்ளம் இரவுபகல் துடித்தது: துடித்துத் தாபத்தினால் வருந்திய என்னிதயத்தில் இப்போதுதான் இன்பத் தென்றல் வீசுகின்றது...

கல்யாணத்தைவ்யாஜமாகவைத்து வாதக்ஷிணை என்கிற பெயரில் சந்தைசகடையில் தான் பெற்ற மகன்களை விற்கும் பெற்றோர்களுக்கு நந்தினி சரியான சவுக்கடி கொடுத்ததற்காக கங்கராஜு-லேஷன்ஸ்...அம்மா! மூவாயிரம் ரூபாய் வந்தாயிற்றா! அதைத் தொட்டபிறகல்லவா நந்தினியின் கையைத் தொடலாம்......என்று குரும்பாகக் கூறினான்.

தம்பீ! ஏதோ போனது போகட்டும்: அவர்தான் அப்படி அசட்டுத்தனமாகச் செய்துவிட்டார் என்றால் நீயும் அதைப் புண்ணில் கோலிடுவதுபோல் கிளறிக் குத்திக்காட்டாதே! கடவுளின் மாயாவிலாஸத்தின்மகிமையையாரால றியக்கூடும்? எப்படித்தான் ஆச்சரியமாய் உங்கப்பாவின் மனத்தை மாற்றினார் தெரியுமா? நந்தினி காலேஜில் படிப்பதே எங்களுக்குத் தெரியாது; அப்பா தனது சொந்த முக்யமான காரியமாய் பொன்னிநகரத்திற்குச் சென்றார். அந்த ஊரிலுள்ள ப்ரபலஸ்தரிடம்தான் அப்பா சென்றதால் அவர் வீட்டில் தங்கினார். "இங்கு மகாத்மாஜி காலேஜ் என்று ஒன்று ப்ரத்யேகமாய் பெண்களுக்காக நடக்கிறது. அதற்கு நானும் 50 ஆயிரம்

ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறேன். இன்று அதன் வருஷவிழா நடக்கிறது. கவர்னர் தலைமை வகிக்கிறார்; நான் அவச்யம் போகவேணும். நீரும் கூடவந்தால் கவர்னருக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன்'' என்று சொன்னாராம்.

கவர்னரைப் பார்க்கும் மோகத்தில் அவருடன் கூடவே இவரும் சென்றார். அங்கு நிகழ்ச்சி நிரலைக் கையில் கொடுத்ததும் அதில் நந்தினி வைத்தியநாதன் என்ற பெயரைப் பார்த்ததுதான் தாமதம். திருடனுக்குத் தேள்கொட்டியது போலாகிவிட்டதாம். நாடகம் என்பது சாமான்யமாகவா நடந்ததாம். கண்ணீரை மழைபோல் பொழியச் செய்ததில் இவரும் ஒருவராகிவிட்டாராம். சுடச்சுட வசனங்களும் அபாரமான நடிப்பின் உச்சஸ்தாயியையும் காணக்காண அவர் உள்ளம் பட்ட வேதனை சொல்லமுடியவில்லையாம்.

கவர்னர்முதல் பலர்பேசிய பேச்சில் நாடகத்தின் அத்புத விஷயத்தைக் கொண்டாடியும் வரதக்ஷிணை வாங்கும் புண்யவான்களைத் திட்டியும் பேசிய பேச்சுகள் பின்னும் இதயத்தைச் சல்லடைக்கண்ணாகத் துளைத்துவிட்டதாம். அவர் சடக்கெனமாறி புனர்ஜென்மம் எடுத்துவிட்டார்.

காரியத்தைமுடித்துக்கொண்டு வீட்டிற்கு வந்தார்; ஏதேதோ ஏற்பாடுகளைச்செய்தார். என்னையும் கூட்டிக்கொண்டு நேரே காலேஜுக்கேசென்று பிரின்ஸ்பால் முதலியவர்களிடம் உத்திரவுபெற்றுநந்தினியேப்ராமிக்கும்படி அவளிடம் மன்னிப்பும் பெற்று இரவு வண்டியில் புறப்பட்டு வந்துசேர்ந்தோம். உனக்குப் புதுமணம்வீசவும் எதிர்பாராத இன்பத்தைக் கொடுக்கவும் முன்னறிவிப்பின்றி வந்து, இதோ உன்னிடம் உன்சரக்கைச் சேர்த்துவிட்டோம். சரிதானே தம்பி! நந்தினி பெற்றோர்களுக்கும் கடிதம் அப்பாவே எழுதியிருக்கிறார். அவர்களும் அனேகமாய் இங்குவந்து விடுவார்கள் என்று மெஷின் போல் கூறிய விஷயங்களைக் கேட்கக்கேட்க வைத்தியநாதனின் இதயத்தில் அமுதக்கடலே பாய்ந்துவிட்டது போலாகியது. பெற்றோரை வணங்கினான்.

தன் பெற்றோர்கள் இருப்பதையும் மறந்து நந்தினியின் மலர்க்கரங்களை அப்படியேபற்றிக்கொண்டு, தைரியலக்ஷ்மியே கற்பனைக்கரசியே! என் பெற்றோர்களையும் என்னையும் மன்னித்துவிட்டாயா! என்று ஆவேசத்துடன் கேட்டான்: மாதரசியின் கண்களில் மலர்கள் உதிர்வதுபோல் ஆனந்த முத்துக்கள் இவன்கையில் உதிர்ந்து சரணாகதி செய்தது. இந்தக் காட்சியைக்கண்டு பூரிப்பதைவிட நித்யகல்யாண மங்கள வைபவசுகம் அவன் பெற்றோர்க்கு வேறு என்ன இருக்கிறது? மங்களம். சுபம்.

ஜகன்மோகினி பிரஸ், திருவல்லிக்கேணி

183172

அரிய தமிழ் விருந்து (தொடர்ச்சி)

ராணி சீலாவதி

வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L.
நான்காவது நவீனம் - ரூ-1/-

1. உபன்யாசமும் உதாசீனமும். 2. பேய்க்குக் கள் வார்த்த கதைதான் 3. வாக்கு பலித்தது—விபரீத யாத்திரையே 4. நிந்தனையும் நிபந்தனையும். 5. உவமையும் உவகையும். 6. வாழ்க்கைத் தோட்டத்தில் மலர்ந்த இதழ். 7. மடமையும் கடமையும்—சூழ்ச்சியின் வீழ்ச்சி 8. இனம் இனத்தைச் சேரும்—தாபமும் தாபமும். 9. விதையும் அறுவடையும் 10. தியாகச் சிகரம்—கடமையின் புண்ணிய வடிவம் 11. சீலாவதியும் சிலாவதியும் 12. ராஜரிஷியின் இதய கீதம்.

பெண்மணிக்கனல்

சரித்திரஜோதி

வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L.
ஐந்தாவது சித்திரம் ரூ 1/-

சரித்திர ஜோதி— 1. ஸ்தலமும் காலமும் 2. அஸ்திவாரம் 3. கபடநாடகமும் சூழ்ச்சிமேல்சூழ்ச்சியும் 4. இறுதி மொழியும் உறுதிப்பாடும் 5. சிங்கமும் புலியும் 6. வீழ்ச்சியும் மீட்சியும்

"கண்முனே காட்டினாள் பெண்மணிக்கனலே, பெண் சக்தியின் சிறப்பை, குன்றா உறுதியின் எல்லையை, மனமுண்டானால் மார்க்கமுண்டு என்ற உண்மையை! இந்திய சமஸ்தானங்களுள் பலவிதத்திலும் முன்னணியில் நிற்கும் மேன்மையை இன்று மைசூர் பெற்றிருப்பதற்கு உண்மையான அஸ்திவாரமிட்டவள் மாதரசி லக்ஷ்மி அம்மணியே!"

இருளில் ஒளி

வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L.
ஆறுவது சுபர் ரூ. 1.40

முதல் பாகம்—1. இருளில் ஒளி 2. திருமகளின் திருவருள் 3. கனியும் கன்னியும் 4. உள்ளும் புறமும் 5. உள்ளொளி 6. மனநிம்மதி 7. ஒளியும் ஒலியும்.

இரண்டாம் பாகம்—1. ஒருபக்தனின் சந்தேகநிவ்ருத்தி 2. கோலும் கொடியும் 3. லகுவான உபாயம் 4. முடிவும் நடுவும் 5. தெய்விக இசையின் அத்புத சக்தி 6. மலையில் மலை 7. கோபியரும் உத்தவரும்.

Jaganmohini, (Dec. 1952.) Regd. No. M. 2210.

தைரிய லக்ஷ்மி

வை. மு. கோ. 106-வது நாவல்

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed and published by V. M. PARTHASARATHY at the Jaganmohini Press, 26, Car St., Triplicane, Madras. 5.
Managing Editor: V. M. SRINIVASAN, M. A. B. L.